Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 152
புதன்கிழமை
சித்திரை 15 ஆம் நாள்
28 ஏப்ரல் 2021
வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20
விலை : ரூ.30
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## துப்பாக்கி வெடித்து இளைஞர் காயம்

முல்லைத்தீவு, ஏப்.28

முல்லைத்தீவு, குமுழமுனையில் 19

## முதல் நாளில் தொற்று மறுநாள் தொற்றில்லை

### யாழ்ப்பாணத்தில் கொரோனா பரிசோதனையில் இந்த விநோதம்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு முதல் நாள் தொற்று 19

# முடக்கத்தை நோக்கி நகர்கிறது இலங்கை!

### 100க்கும் அதிக பகுதிகள் முடக்கம்

கொழும்பு, ஏப்ரல் 28

கொரோனாத் தொற்று தீவிரத்தால் நாட்டில் நேற்று மாலைவரை சுமார் 100 கிராம அலுவலர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. மறு அறிவித்தல்வரை அந்தப் பகுதிகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 19

## இரண்டாவது 'டோஸ்' இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஏப்.28

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான ஒக்ஸ்போர்ட் அஸ்ட் 19

## தனியார் வகுப்புக்கள் அனைத்துக்கும் தடை

கொழும்பு, ஏப். 28

இந்த மாதம் 30ஆம் திகதி வரையில் தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் தனியார் வகுப்புக்கள் அனைத்தையும் மூடுமாறு அரசு அறிவித்துள்ளது. கொரோனா பரவல் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய தெரிவித்துள்ளார். (ஒ.இ)

## வடக்கில் நேற்றும் 4 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஏப்.28

வடக்கு மாகாணத்தில் நேற்று நான்கு பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 19

## சுழற்சி வேலை முறைமை: சுற்றறிக்கை வெளியானது

கொழும்பு, ஏப்.28

நாட்டில் தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு அரச ஊழியர்களைக் கடமைக்கு அமர்த்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முதல் அரச திணைக்களம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் மாதத்தில் 8 நாள்கள் வாரத்தில் இரண்டு நாள்கள் என அமையும் 19

களுபோவிலவில்

## ஒட்சிசனுக்கு பற்றாக்குறை!

கொழும்பு, ஏப். 28

கொழும்பு மேற்கு களுபோவில மருத்துவமனையில் ஒட்சிசன் சிலிண்டருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் முதித்தா பெரேரா 19

## கொரோனா 1,096

கொழும்பு, ஏப்.28

நாட்டில் நேற்று மட்டும் ஆயிரத்து 96 பேர் புதி 19

## பாடசாலைகளுக்கு பூட்டு

கொழும்பு, ஏப்.28

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வரையில் மூடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்ச 19

## முகத்தை மூடும் ஆடைக்குத் தடை

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப். 28

புர்கா உள்ளிட்ட முகத்தை முழுமையாக மூடும் ஆடைகளைத் தடைசெய்யும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. சுகாதார வழிகாட்டல்களுக்கமைவான முகக்கவசங்கள் தவிர்ந்த புர்கா உள்ளிட்ட பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அனைத்து முகத்தை மறைக்கக்கூடிய ஆடைகள் அணிவதை 19

## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

விபத்தில் சிக்கி காயமடைந்து சிகிச்சைபெற்று வந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இளவாலையைச் சேர்ந்த வே. அற்புதராசா (வயது-78) என்பவரே உயிரிழந்துள்ளார். 19

## மரத்தில் இருந்து வீழ்ந்தவர் சாவு!

யாழ்ப்பாணம், ஏப்.28

மரத்தில் இருந்து வீழ்ந்து காயமடைந்தவர் 19

## நாடிக்கு முகக்கவசம்; நடத்துநருக்கு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஏப்.28

முகக்கவசம் அணியாது கடமையில் ஈடுபட்ட இலங்கை போக்குவரத்துச் சபையின் நடத்துநரை கடு 19

MOBITEL Non-Stop லொக்கா

இதயம் போதும் எனும் வரை SCROLL செய்யுங்கள்
விரல்கள் போதும் எனும் வரை CHAT செய்யுங்கள்
கண்கள் போதும் எனும் வரை VIDEO பாருங்கள்
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170# அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
www.sltmobitel.lk
SLTMOBITEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### கொரோனாப் பெருந்தொற்று

# சுகாதார நடைமுறைகளை மீறினால் கடும் நடவடிக்கை

### வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

வவுனியா, ஏப். 28

**சுகாதார நடைமுறைகளை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.**

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் முடிந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடமாகாணத்தில் கொரோனா பரம்பல் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த மாவட்டச் செயலர்களூடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் வவுனியாவில் சௌபாக்கியா மற்றும் வீதி அபிவிருத்தி திட்டங்கள் நல்லமுறையிலேயே இடம்பெற்று வருகின்றன. வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் மக்களின் காணிப் பிரச்சனைகள், சுகாதாரத்துறை சார்ந்த விடயங்கள் போன்றனவும் கூட்டத்தில் ஆராயப்பட்டன. சுகாதாரத் துறைசார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் எமக்கு கிடைத்துள்ளன. மருத்துவத் துறைசார்ந்த வெற்றிடங்களும் இங்கு இருக்கின்றன. இவற்றை தீர்ப்பதற்காக தொடர்ந்து சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளேன்.

தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்களை புனரமைப்பதற்காக 500 மில்லியன் ரூபா வடமாகாணத்துக்குக் கிடைத்துள்ளது. அதனூடாக அவற்றை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வவுனியா மாவட்டத்தின் பேராறு நீர்த்தேக்கத்தில் விஸ்தரிப்பு பணிகள் இடம் பெற்றுவருகின்றன. அத்துடன் செட்டிகுளத்திலும், நெடுங்கேணியிலும் நீர்த்தேக்க திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் மேலதிகமான நீர்த்தேங்கங்களை அமைப்பதற்கான நிதியை மத்திய அரசிடம் கேட்டுள்ளோம்.

அடுத்தவாரமளவில் அந்த நிதி எமக்கு கிடைக்கும். பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு 100 மில்லியனை ஒதுக்குவதற்கு திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது - என்றார்.

இந்த ஒருங்கிணைப்பு கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பதற்காக அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-110)

## விதிமுறைகளை மீறி திருவிழா உற்சவம்!

*வண்ணை சிறிகாமாட்சி அம்பாள் ஆலய தலைவரும் செயலாளரும் கைது*

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிறி காமாட்சி அம்பாள், ஆலயத்தில் கொரோனாப் பெருந்தொற்று விதிமுறைகளை மீறி தேர்திருவிழாவை நடத்திய குற்றச்சாட்டில் ஆலயத்தின் தலைவரும், செயலாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறையில் உள்ள விதிமுறைகளை மீறி பெருந்தொற்று ஏற்பட ஏதுநிலைகளை ஏற்படுத்தினர் என்று அவர்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவுள்ளது. இருவருக்கும் நேற்று பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய 50 பக்தர்களுக்கு மட்டுமே ஆலயத்தில் ஒரே நேரத்தில் வழிபட அனுமதிக்கப்படும் என சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மண்டேலாவுக்கு யாழில் எதிர்ப்பு



யாழ்ப்பாணம், ஏப். 28

தென்னிந்தியாவில் வெளிவர இருக்கும் 'மண்டேலா' திரைப் படத்தில் அழகக் கலையில் ஈடுபடுவோரை கொச்சைப் படுத்தும் வகையில் இடம்பெற்ற காட்சிகளை இல்லாமல் செய்ய வேண்டுமென வடமாகாண அழகக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

தென்னிந்தியாவில் வெளிவர இருக்கும் மண்டேலா திரைப்படத்தில் அழகக் கலையில் ஈடுபடுவோரை கொச்சைப்படுத்தும் முகமாகவும் அவர்களின் தொழிலை 30 வருடம் பின்னோக்கி கொண்டு செல்லும் விதமாகவும் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கு தென்னிந்தியாவில் போராட்டங்கள் ஆரம்பித்துள்ள நிலையில், திரைப்படத்துக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகளும் தொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே நாமும் மண்டேலா திரைப்படத்துக்கு எதிர்ப்பை தெரிவிப்பதோடு திரைப்படமானது இலங்கையில் திரையிடும்போது எமது தொழிலை இழிவுபடுத்தும் காட்சிகளை நீக்காவிட்டால் நாமும் போராட்டத்தில் ஈடுபடுவோம் - என்றனர்.

இந்தத் திரைப்படம் ஒரு மாதத்துக்கு முன்னரேயே உலகமெங்கும் பிரபல இணையத்தளத்தில் உத்தியோகபூர்வமாக வெளியாகியமை குறிப்பிடத்தக்கது.

(ம-20)

### வவு. சுற்றுலா மைய விவகாரம்

# குத்தகை ஒப்பந்தத்தை உடன் இரத்துச்செய்க!

### ஆளுநர் உத்தரவு



வவுனியா, ஏப். 28

வவுனியா சுற்றுலா மைய விவகாரத்தில் குத்தகைதாரருடனான ஒப்பந்தத்தை இரத்துச்செய்யுமாறு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்படி உத்தரவு ஆளுநரால் விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுமதியுடன் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நகர சபையால் பொழுதுபோக்கு மையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட பொழுதுபோக்கு மையம் நபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

பின்னர் குறித்த குத்தகைதாரர் நகர சபையின் அனுமதி இல்லாமல் புதிதாக் கட்டடங்களை அமைத்து நிபந்தனைகளை மீறினார் என்று நகரசபையால் குற்றஞ்சாட்டப்பட்டதுடன், அந்தக் கட்டடங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும் குத்தகைதாரர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தமையால் அதனை உடைப்பதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தது. இத்தகைய பின்னணியிலேயே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்:

கட்டடத்தை அகற்றுவதற்கு எதிராகவே வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. அந்தவிடயம் நீதிமன்றில் இடம்பெற்று வருவதால் அதில்தலையீடு செய்யாமல், ஒப்பந்ததாரருடனான குத்தகை ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கின்றமையை முன்னிறுத்தி அதனை இரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை நகர சபை எடுக்க வேண்டும். இது தொடர்பில் சட்டத்தரணிகளின் கருத்துக்களைப் பெற்று ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

(ம-110)

### புதுக்குடியிருப்பு கோம்பாவிலில் அதிகளவான திருட்டுகள்

முல்லைத்தீவு, ஏப். 28

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியில் நேற்று முன்தினம் வீடொன்று உடைக்கப்பட்டு பணம், நகை என்பவை திருடப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பில் அண்மைய நாள்களாக இது போன்ற திருட்டுகள் அதிகம் பதிவாகின்றன. கடந்த சில நாள்களில் மட்டும் சுமார் 5 திருட்டுகள் இடம்பெற்றுள்ளன. எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

(ம-19)

## நிர்வாகத்தில் உள்ள ஊழலால்தான் இலங்கை கிரிக்கெட்டில் பின்னடைவு

### ரணதுங்க அதிருப்தி

இலங்கை கிரிக்கெட் அணியில் சிறந்த வீரர்கள் இருந்தும் நிர்வாகத்தில் ஊழல்வாதிகள் உள்ளதால் கிரிக்கெட் அணி வீழ்ச்சியை சந்தித்துள்ளது என்று இலங்கைக்கு உலகக்கிண்ணம் வென்று கொடுத்தவரும் முன்னாள் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். கல்குடாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: இலங்கை கிரிக்கெட் அணியில் நான் தலைமைத்துவம் வகித்த சமயத்தில் நிர்வாகத்தில் சிறந்தவர்கள் இருந்தார்கள். இதன் மூலம் எங்களது திறமைகளை வெளிக்கொணர்ந்து உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றினோம். ஆனால் தற்போது இலங்கை கிரிக்கெட் அணியில் சிறந்த வீரர்கள் இருந்தும் கிரிக்கெட் நிர்வாகத்தில் ஊழல்வாதிகள் அதிகம் உள்ளதால் இலங்கை கிரிக்கெட் அணி பெரும் பின்னடைவைச் சந்தித்து வருகின்றது. எனவே இந்த விவகாரத்தில் விளையாட்டு அமைச்சர் கூடிய கவனம் செலுத்தி கிரிக்கெட்டை முன்னேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்- என்றார்.

(ம)

Digitized by Aavanaham Foundation
aavanaham.org

# பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கோம்; பயணங்களை இயன்றவரை தவிருங்கள்

## இராணுவத் தளபதி கோரிக்கை



**கொழும்பு, ஏப். 28**

**மாவட்டங்களுக்கிடையில் பயணக் கட்டுப்பாடுகள் விதிப்பது தொடர்பில் இன்னமும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. எனினும், பொதுமக்கள் அநாவசிய பயணங்கள் மேற்கொள்வதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது என்று இராணுவத் தளபதியும் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டில் நேற்று (நேற்று முன்தினம்) 997 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவ் எண்ணிக்கை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கக் கூடும். எனவே, சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அரச ஊழியர்கள் கட்டங்கட்டமாக தொழிலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். நிகழ்வுகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் 150 பேர் மட்டுமே கலந்துகொள்ள முடியும். மண்டபத்தின் அளவைப் பொறுத்து அவ் எண்ணிக்கை மேலும் குறைவடையலாம். அதேவேளை, மாவட்டங்களுக்கிடையில் பயணக்கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான தேவை எழவில்லை. கொரோனா தொடர்பில் நாட்டு மக்களுக்கும் சிறந்த தெளிவு உள்ளது. எனவே, பயணங்களை மட்டுப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அநாவசிய பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பயணம் மேற்கொள்ள வேண்டிய கட்டாய தேவை இருந்தால் சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும்- என்றார். (ஒ,44)

# யாழின் பிரதான சந்திகளில் ராணுவத்தினர் கண்காணிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்ப்பாணத்தின் பிரதான சந்திகளில், தீவிர கண்காணிப்புப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். கொரோனாத் தொற்று நிலைமை தற்போது அதிகரித்து வரும் நிலையில், சுகாதார விதிமுறைகளை நாட்டில் மக்கள் கடைப்பிடிக்கின்றனரா என்பது தொடர்பில் இராணுவத்தினர் கண்காணித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. முகக்கவசத்தை உரியமுறையில் அணியாதவர்களை எச்சரித்து, அதனை உரிய முறையில் அணியுமாறு சந்திகளில் நிற்கும் இராணுவத்தினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

குறிப்பாக கொக்குவில் சந்தியில், தகர கொட்டகை அமைத்து இராணுவத்தினர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். (ப-4-20,17)

# மன்னாரில் 1,578 ஏக்கரில் சிறுபோக பயிர்ச் செய்கை

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார்,ஏப்.28

மன்னார் மாவட்டத்தில் இம்முறை 2 ஆயிரத்து 578 ஏக்கரில் சிறுபோக பயிர்ச்செய்கையும், 400 ஏக்கர் மேட்டு நில பயிர் செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது என்ற மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார். மன்னாரில் இம்முறை சிறுபோகப் பயிர்ச் செய்கை செய்வது தொடர்பான கூட்டம் உயிலங்குளம் கட்டுக்கரை திட்டக்குழு அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கையிலேயே மன்னார் மாவட்டத்தில் மட்டும் தான் சிறுபோக பயிர்ச் செய்கையானது பல பகுதிகளில் செய்யப்படுகிறது

அந்த அடிப்படையில் இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய கட்டுக்கரை 11 ஆம் கட்டை மற்றும் 12 ஆம் கட்டை, 13 ஆம் கட்டை முதன்மை வாய்க்கால்கள் மேலும் அடைக்கலமோட்டை சின்ன உடைப்பு பெரிய உடைப்பு பிரதான வாய்க்கால் என்பவற்றினூடாக 2 ஆயிரத்து 578 ஏக்கரில் இம்முறை சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்வது என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக குருவில் வான் வாய்க்கால் ஊடாக 400 ஏக்கர் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது

இதற்கான உரம் மற்றும் விதைநெல் போன்றவற்றின் விநியோகங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் அடாத்துப் பயிர்ச்செய்கை மேற்கொள்பவர்கள் மீது இம்முறை சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுத்து இருக்கின்றோம். அதே போன்று கால்நடை வளர்ப்போர் உரிய முறையில் கால்நடைகளை பராமரிக்காவிட்டால் அதற்கான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் இந்த கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ஜ-213)

# 90 நாள்கள் தடுப்பில் ரிஷாத் பதியுதீன்

கொழும்பு, ஏப். 28

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோரை 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான உத்தரவு பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து பெறப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண நேற்று தெரிவித்தார்.

ஏற்கனவே பெறப்பட்டிருந்த 72 மணிநேர தடுப்புக் காலம் நேற்றுக் காலையுடன் நிறைவடைந்துள்ள நிலையில், மேலும் 90 நாள்கள் தடுத்து வைப்பதற்கான உத்தரவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பெற்றுக்கொண்டுள்ளனர். உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல் குண்டுதாரிகளுக்கு உதவிய குற்றச்சாட்டில் இவர்கள் இருவரும் கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ,ப,4)

# பீதியடைய வேண்டாம்; குடாநாடு முடக்கப்படா

## மாவட்டச் செயலர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் கொரோ பீதியடையத் தேவையில்லை. குடாநாட்டை முடக்கும் எந்தத் திட்டமும் இல்லை. தேவையற்ற விதமாக அதிகளவில் ஒன்றுகூடி பொருள்கள் கொள்வனவுக்கு முண்டியடிக்க வேண்டாம்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஆலயங்களில் வழிபாட்டுக்கு 50பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் நடைமுறையில் அது பின்பற்றப்படவில்லை. பொதுமக்கள் இவ்வாறான அலட்சியப் போக்கில் செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும். அரசு சில மாவட்டங்களில் ஒரு சில கிராம அலுவலர் பிரிவுகளை தற்போது முடக்கியுள்ளது. ஆனால் அவ்வாறான நிலைமை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஏற்படவில்லை. கடந்த வாரம் மக்கள் பீதியடைந்து பொருள்கள் கொள்வனவில் கவனம் செலுத்தினர். இதனால் சமூக இடைவெளியில்லாமல் அதிகளவானோர் ஒன்றுகூடும் நிலைமை அவதானிக்கப்பட்டது. பொதுமக்கள் இது தொடர்பில் தேவையற்று பீதியடைய வேண்டாம். யாழ்ப்பாணக் குடாநாட்டை முடக்கும் தீர்மானம் எதுவும் இல்லை- என்றார். (ஒ,20)

# தவிசாளருக்கு வரவேற்பு

முல்லைத்தீவு,ஏப்.28

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் புதிய தவிசாளராக நியமிக்கப்பட்ட க.விஜிந்தனுக்கு, முள்ளியவளை வடக்கு கிராம மக்களால் வரவேற்பு நிகழ்வு முள்ளியவளை வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. குறித்த வரவேற்பு நிகழ்வை கிராம அபிவிருத்திச் சங்கம் , சமதான நல்லெண்ணக்குழு,வெண்மலர் விளையாட்டுக்கழகம் மற்றும் முள்ளியவளை வடக்கு சனசமூக நிலையம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. நிகழ்வில் தவிசாளருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளதுடன் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. (ஜ-19)

# கல்முனை பிரதேச செயலக விவகாரம்; தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலையீடு

கல்முனை, ஏப். 28

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரமிறக்கியமை தொடர்பாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சுடன், எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பேச்சை நடத்தவுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவிக்கையில்:

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்சவுடன் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரமிறக்கியமை தொடர்பாக நீண்ட கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தோம். 1993ஆம் ஆண்டிலிருந்து தமிழ்ப் பிரிவாக இயங்கி வரும் இந்தப் பிரதேச செயலகத்துக்கு காணி மற்றும் நிதி தொடர்பான அதிகாரங்கள் மட்டுமே வழங்கப்படவில்லை. தற்போது இந்தப் பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ், 39 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. இங்கு 135 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

அவ்விதமான ஒரு பிரதேச செயலகத்தை 'உப பிரதேச செயலகம்' என்ற வகைக்குள் குறிப்பிட்டு தரமிறக்குவதானது பொருத்தமற்ற செயற்படாகும். இலங்கை வரலாற்றில் முதன்முதலாக தரமிறக்கப்பட்ட பிரதேச செயலகமாகவும் இதுவே காணப்படுகின்றது. நீதி, நியாயமற்ற முறையில் தனிநபர் ஒருவரின் அரசியல் இருப்புக்காக இவ்விதமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே இந்தச் செயற்பாட்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சரிடம் கேட்டுக் கொண்டோம். அவர், உடனயடியாகவே அம்பாறை மாவட்டச் செயலாளருடன் தொடர்பு கொண்டு, கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தை உப பிரதேச செயலகம் என்று பெயர்ப்பலகையை அமைத்தல் உள்ளிட்ட இதர அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார்-என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் படுக்கைகளுக்கு பற்றாக்குறை

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு,ஏப்.28**

**நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்றாளர்களுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் படுக்கைகள் பற்றாக்குறையாக உள்ளன என்று ஆரம்ப சுகாதார, தொற்றுநோய் மற்றும் கொவிட் 19 கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.**

கொரோனாவின் புதிய திரிபு வெளிப்படையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனால் அவசர சிகிச்சைப்பிரிவுகளில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதனால் இளைஞர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரியவர்களை விட அவர்களே அதிகமாக தீவிர சிகிச்சை பிரிவுகளில் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. இருப்பினும், நிலைமையைத் தணிக்கவும், ஆபத்தைக் குறைக்கவும் நாங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம் மக்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)

# வழிகாட்டல்களை மீறினால் கட்டுப்பாடுகளும் இறுகும்

## இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு.ஏப்.28

மக்கள் தொடர்ச்சியாக கொரோனாத் தொற்றுத் தொடர்பான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதை அலட்சியப்படுத்தினால், கடுமையான கட்டுப்பாடுகளைப் பிரயோகிக்க நேரிடும் என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது. பொதுமக்கள் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது அவசியம். கடந்த புத்தாண்டு விடுமுறை காலத்தில் மாகாணங்களுக்கிடையில் பயணத் தடைகளை மேற்கொண்டிருந்தால், மக்கள் சுற்றுலாப் பயணங்களை மேற்கொண்டமை உள்ளிட்ட அநாவசியமான பயணங்களைத் தவிர்த்திருக்க வாய்ப்புண்டு. எவ்வாறாயினும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் மே மாதம் 31 ஆம் திகதிவரை நடைமுறைக்கு வரும் வகையில் சுகாதார அமைச்சால் புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதனை முழுமையாகப் பின்பற்றுவது மக்களின் பொறுப்பாகும் - என்றார். (ப-4)

# பாடசாலைகள் மீள எப்போது திறக்கப்படும்?

## வார இறுதியில் முக்கிய கூட்டம்

கொழும்பு, ஏப். 28

சுகாதாரத் தரப்பினர் மற்றும் அதிபர்களுடன் கலந்துரையாடிய பின்னரே பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் நேற்று அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்காதிருக்க அரசு தீர்மானித்துள்ளது. வார இறுதியில் சுகாதாரத் தரப்பினர், மாகாண கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுடன் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இதன்போதே மே 3 ஆம் திகதி பாடசாலையை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும். மாணவர்களின் சுகாதார பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கியே தீர்மானங்கள் எடுக்கப்படும்-என்றார். (ஒ.44)

# தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு புதிய மாறுபாடுகள் எதுவுமில்லை

## சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.28

இலங்கையில் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொடர்பான புதிய மாறுபாடுகள் எவையும் ஏற்படவில்லை என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் சுகாதார ஊழியர்கள் உட்பட 9 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு ஏற்கனவே அஸ்ட்ராஜெனகா தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. முதல் டோஸ் பெற்றவர்கள் எவருக்கும் இதுவரை புதிய மாறுபாடு பரவவில்லை. எனினும் எதிர்காலத்தில் அவர்கள் தொற்றுநோயை எதிர்கொள்ள நேரிட்டால், அவர்களுக்கு ஏற்படும் ஆபத்து மிகக் குறைவாக இருக்கும். அதனால் தான் அனைவருக்கும் தடுப்பூசி போடுவது மிகவும் முக்கியமானது என்று வலியுறுத்துகின்றோம். தொற்றிலிருந்து விடுபட தடுப்பூசிகள் மட்டுமே வழி என்றும் பணியகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-4)

# கிளிநொச்சி மாவட்டம் பாதுகாப்பாகவே உள்ளது

## கிளி. மாவட்டச் செயலர் தெரிவிப்பு



கிளிநொச்சி,ஏப்.28

கிளிநொச்சி மாவட்டம் தற்போது வரை கொரோனா பாதிப்பிலிருந்து பாதுகாப்பாகவே இருக்கின்றது. எனவே இந்த நிலைமையைத் தொடர்ந்தும் பேணுவதற்கு பொது மக்கள் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளைக் கடைப்பிடித்து நடந்துகொள்ள வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் எழுந்தமானதாக மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளில் கிடைக்கப்பெறுகின்ற முடிவுகளின் படி மாவட்டத்தைச் சேர்ந்த எவருக்கும் தொற்று ஏற்படவில்லை. வெளிமாட்டங்களிலிருந்து வருகின்றவர்களுக்கே தொற்று ஏற்பட்டுள்ளது.எனவே கிளிநொச்சி மாவட்டம் ஓரளவுக்கு பாதுகாப்பாகவே உள்ளது. இருப்பினும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, பொதுமக்கள் நடந்து கொள்வதோடு, சுகாதாரத் துறையின் ஆலோசனைகளைப் பின்பற்றியும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் - என்றார். (ஐ-214,319)

# நாட்டில் பரவும் வைரஸ் வகைகள்

## மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு.ஏப்.28

டெங்குக் காய்ச்சல் உட்பட மேலும் சில வகை வைரஸ்கள் நாட்டில் பரவலடைந்துள்ளன. எனவே மக்கள் மிக அவதானமாகச் செயற்படவேண்டும் என்று சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் டெங்குக் காய்ச்சல் மீண்டும் அதிகரித்து வருகின்றது. அதேபோன்று சில வகை வைரஸ்கள் தொடர்பிலும் பல்வேறு பிரதேசங்களில் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளன. சிறுவர்கள் மத்தியில் காய்ச்சல், தலைவலி மற்றும் உடல் சோர்வு ஆகியவையே அந்த வைரஸ்களின் அறிகுறிகளாக உள்ளன.

மேலும் சிலருக்கு டெங்கு அல்லது அதற்கு சமமான நோய் அறிகுறிகள் தென்படலாம். எனினும் அவை கொரோனா வைரஸ் பாதிப்பு அல்ல. அவை வேறொரு வகை வைரஸ்களின் தாக்கம். சில பகுதிகளில் சிறுவர்கள் மத்தியில் வாயைச் சுற்றி புண்கள் ஏற்படுகின்றன.கை, கால்களில் சிவப்புப் பருபோன்று உருவாகின்றன. அது தொடர்பிலும் தகவல்கள் கிடைத்து வருகின்றன. அவ்வாறான அறிகுறிகள் காணப்படும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம். உரிய மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வது சிறந்தது - என்றார். (ப-4)

# மீண்டும் வெலிசறை கொத்தணியா?

கொழும்பு, ஏப். 28

வெலிசறை கடற்படை முகாமில் உடற்பயிற்சி பிரிவில் பணியாற்றிய ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மீண்டும் வெலிசறை கொத்தணி ஏற்படுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ளது வெலிசறை கடற்படை முகாம். கொரோனா முதலாவது அலையின்போது இந்த முகாமைச் சேர்ந்த 900 கடற்படையினர் வரையில் தொற்றுக்கு இலக்காகினர்.

இந்த நிலையில் அந்த முகாமில் உடற்பயிற்சி பிரிவில் பணியாற்றும் ஒருவர் இரண்டு தினங்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போதே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.இ)

# ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தொற்றாளர்கள்

## மூடக்கோரி மக்கள் போராட்டம்

பிங்கிரியவிலாட்டவப் பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில், கடந்த சில நாள்களாக அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும் தொழிற்சாலை மூடப்படாமல் இன்னும் செயற்பட்டு வருகின்றது. அதனை மூடக்கோரி கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆடைத்தொழிற்சாலைக்கு அருகில் தாம் வசிப்பதால் தமது பிள்ளைகள் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவதில்லை. தொழிற்சாலை தொடர்ந்து இயங்கினால் தங்கள் கிராமம் பெரும் ஆபத்துக்கு உள்ளாகும் என்று மக்கள் தெரிவித்தனர். கடந்த சில நாள்களில், அந்தத் தொழிற்சாலையில் இருந்து 142 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதனை இவன் முடிக்குமென்றாய்ந்து...

அதியுச்ச ஆபத்தான நிலையில் உள்ளது நாடு. புலிகளை அடக்கியது போல, கொரோனாவையும் அடக்கிவிட்டோம் என்று இலங்கை அரசாங்கம் தன்னைத் தானே புகழ்ந்து கொண்டது. 'கொரோனாவை வென்ற கோத்தா' என்று பட்டம் கொடுக்காதது மட்டும் தான் குறை. மற்றைய எல்லா வீரதீரப் பிரதாபங்களையும் விளம்பரப்படுத்தி, கொரோனாவை விரட்டிய நாடாக மாறியமைக்கு இலங்கை ஜனாதிபதிதான் காரணம் எனவும், அவர் கொவிட் செயலணியை இராணுவ மயப்படுத்தியிருக்காவிட்டால், இவ்வளவு விரைவாக கொரோனாவை ஒடுக்கியிருக்க முடியாது எனவும் நாடெங்கும் காதுபுளிக்குமளவு திரும்ப திரும்ப அரசதரப்பால் சொல்லப்பட்டது.


ஆனால் 'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவாய்?' என்று நக்கலாகக் கேட்பது போல, கொரோனா இரண்டாம், மூன்றாம் அலைகள் என்று ஓயாமல் அடித்தபடியே இருக்கின்றது. முதல் அலையைக் கட்டுப்படுத்தியதில் காட்டிய வீரத்தை கொரோனாவின் இரண்டாம், மூன்றாம் அலைகளில் அரசாங்கத்தால் காட்ட முடியவில்லை. 'முதல் அலையையே சர்வசாதாரணமாக அடக்கிய எங்களுக்கு இனிவரும் அலைகள் அதைவிட சாதாரணமானவை' என்ற அலட்சியமே இந்தளவு மோசமான நிலைக்கு முக்கியமான காரணம். இந்த அலட்சியத்தின் விளைவாக நாட்டில் கொண்டுவரப்பட்ட சுகாதார நடைமுறைகள் வெகுவாகத் தளர்த்தப்பட்டன. கொரோனா என்ற வைரஸ் உலகத்தில் இருந்தே விரட்டியடிக்கப்பட்டு விட்டதான மிதப்போடு, சகலகாரியங்களும் தங்குதடையின்றி நடந்தன. வீட்டு விசேஷசங்கள், மதரீதியான வைபவங்கள், களியாட்டங்கள் என்று எதுவுமே குறையில்லாமல் நடந்தேற, கொரோனாவும் குறையில்லாமல் நிரந்தரமாக இங்கு குடியேற ஆரம்பித்தது.

இப்போது கட்டுப்படுத்தக்கூடிய கட்டத்தை கொரோனா தாண்டி பல வாரங்கள் ஆகிவிட்டன. நாளும் பொழுதும் அதன் தீவிரம் இன்னும் அதிகரிக்கின்றதே தவிர, குறைவதாக இல்லை. இதற்குள் திரிபடைந்த, வீரியம் கூடிய வைரஸே இலங்கையில் பரவிக்கொண்டிருப்பதாகவும், அது காற்றுமூலமும் பரவக்கூடியவாறு தன்னை தகவமைத்துக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. தடுப்பூசி ஏற்றியும் கொரோனோவின் அசுரவேக முன்னோக்கிய பாய்ச்சலை தடுத்து நிறுத்தவோ, ஊடுருவித்தாக்கவோ முடியாத நிலை. சுகாதாரக் கட்டுப்பாடுகளின் இறுக்கத்தை தளர்த்தாமல், மக்களைச் சரியானபடி விழிப்புணர்வூட்டி, கண்காணிப்பையும் விலக்காமல், பி.சி.ஆர், மற்றும் அண்டிஜென் சோதனைகளைக் குறைக்காமல், கொரோனா அதிகரித்தால் அதனை எதிர்கொள்வதற்கான வழிவகைகள் எவையென்று முற்கூட்டியே தயார் செய்திருந்தால், இந்தளவு தூரம் கொரோனா விஸ்வரூபமெடுத்திருக்க முடியாது.

அதைவிட, முற்றுமுழுதாக கொவிட் செயலணியை இராணுவத்தின் கீழ் கொண்டு வந்தமையும் தவறான முடிவே. ஒரு அவசரத்துக்கு நிலைமையைச் சமாளிக்க வேண்டுமானால் இராணுவத்தைப் பயன்படுத்தலாம். ஆனால் கொரோனா ஒன்றும் தீவிரவாதி கிடையாது, தொடர்ச்சியாக இராணுவக் கண்காணிப்பில் கீழ் கட்டுப்படுத்துவதற்கு. உலகமெங்கும் கொரோனாவை அடக்க சுகாதாரத்துறையை முதன்மைப்படுத்த இலங்கை மட்டுமே இராணுவத்தை நம்பி கொரோனாவை எதிர்த்தது. அதன் விளைவையே இப்போது அனுபவிக்கிறோம். ஒரு வைரஸ் பற்றிய சரியான எதிர்க்காப்பு நடவடிக்கையை மேற்கொள்ள சுகாதாரத்துறையினரே பொருத்தமானவர்கள்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வகையில் நடந்துகொண்டால், எல்லாமே சரியாக நடந்திருக்கும். ஆனால் இலங்கையில் எல்லாமே தலைகீழாக நடக்க, கொரோனா பாயைப் போட்டு படுத்தே விட்டது. இன்னும் காலம் கடந்துவிடவில்லை. கொவிட் செயலணியின் செயற்பாடுகளை துரிதமாக மீளாய்வு செய்து, உரிய முறையில் அதனைச் செம்மையாக்கி, இராணுவத்தின் பிடியில் இருந்து அதனை விடுவித்து சுயாதீனமாக இயங்க அனுமதித்தால், ஓரளவுக்கேனும் கொரோனாவின் பரவுகை வேகத்தைக் கட்டுப்படுத்த முடியும். அதனை விடுத்து "கெடுகிறேன் பந்தயம் பிடி" என்று விடாப்பிடியாக நின்றால், கொரோனா தரப்போகும் பாதிப்புகளையும் ஏற்க தயாராகவே இருக்கவேண்டும்.



# இந்திய மக்களுக்காக நாம் பிரார்த்திப்போம்

## மனோ கணேசன் எம்.பி அழைப்பு

**கொழும்பு,ஏப்.28**

**கொரோனாத் தொற்று பேராபத்தில் சிக்கி யுள்ள இந்திய மக்களுக்காக, பேதங்களை மறந்து, மனிதத்தின் பெயரால் பிரார்த்தனை செய்வோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.**



சுமார் 130 கோடி மக்கள் தொகை கொண்ட பாரத தேசம், இன்று கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி அல்லலுறுகின்றது. இந்திய நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் மக்களின் கண்ணீர் எமக்குத் தெரிகிறது. இது கொரோனா சுனாமி அவலம் என்று கூறப்படுகின்றது. பாரதம் இந்தக் கொடுமையிலிருந்து விரைவில் மீள வேண்டும் என்ற நோக்கில் நாம் நமது வீடுகளில் இருந்தபடி பூஜை மற்றும் பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும். அதேவேளை எமது நாட்டிலும் இந்தக் கொரோனா புதிய வீரியத்துடன் பரவி வருகின்றது. நாட்டின் சுகாதாரத் துறையினருக்கு வழங்கும் பூரண ஒத்துழைப்பின் மூலம், இதை நாம் எதிர்கொள்ள வேண்டும். பொதுமக்களாகிய நாமும் பொறுப்புடன் நடந்து இந்த பேரழிவை எதிர்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

# துறைமுக நகர விவகாரம் பிக்குகளிடையே மோதல்

கொழும்பு. ஏப். 28

துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவு தொடர்பில் மகாசங்கத்தினருக்கும், தேசிய பிக்கு முன்னணிக்கும் இடையில் கருத்து வேறுபாடு உருவாகியுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபயவுடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவை ஆதரித்து மகாசங்கத்தினர் கருத்து வெளியிட்டிருந்தனர். இவ்வாறானதொரு நிலையில் தேசிய பிக்கு முன்னணி அதற்கு கண்டனம் வெளியிட்டுள்ளது.

'நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளில் மகாசங்கத்தினரை பங்குதாரர்களாக்குவது பௌத்த சாசனத்துக்கு முரணானது. அரசியல்வாதிகள் குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்படுபவர்கள். நாட்டின் எதிர்காலம் தொடர்பில் மகாசங்கத்தினருக்கு பௌத்த சாசனத்தின் ஊடாக அதிக பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே அவற்றை செயற்படுத்த மகாசங்கத்தினர் கவனம் செலுத்த வேண்டும்' என்று தேசிய பிக்கு முன்னணியின் செயலாளர் வக்முல்லே உத்தத தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவு தொடர்பில், அரசுக்குள்ளேயே இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. மக்களின் அரசியல் சிந்தனையைத் திசை திருப்புவதற்காக அரசியல்வாதிகள் இருவேறுபட்ட கொள்கைகளைக் கொண்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் அரசு முறையற்ற வகையில் செயற்பட முயற்சித்தது. மக்களின் கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் தீர்மானத்தை கைவிட்டது. நாட்டின் தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு வழங்கும் கொள்கையில் அரசு தற்போதும் உறுதியாக உள்ளது. கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் தோற்றம் பெற்றுள்ளன. அரசுக்கு ஆதரவு வழங்கிய மதத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் சட்ட வரைவுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடியுள்ளனர். எனவே இது தொடர்பில் மகாசங்கத்தினர் முதலில் தெளிவுபெற வேண்டும் - என்றார். (ஒ.ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனையே ஏமாற்றிய கருணாவுக்கு மக்களை ஏமாற்றுவதென்பது சாதாரணமே

## காரைதீவு பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 28**

**தேசியத் தலைவரை ஏமாற்றிய கருணாவுக்கு மக்களை ஏமாற்றுவது ஒன்றும் பெரிய விடயமே இல்லை. தேசிய ரீதியாக செயற்பட்ட தலைவரையே ஏமாற்றிய நபர், கல்முனையைத் தரமுயர்த்தித் தருவார் என நாங்கள் நம்பி ஏமாந்தமைக்கு யாரையும் குறை சொல்ல முடியாது. இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் கவலை தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்முனை மக்கள் இன்று உரிமை மறுக்கப்பட்டு நிர்க்கதியாக இருக்கிறார்கள். கல்முனை பிரதேச செயலகம் தரமுயருமென்ற நம்பிக்கையில் 7ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட வாக்குகளை கோத்தாபய ராஜபக்சவுக்கு செலுத்தினார்கள். கல்முனையைப் போல காரைதீவும் அபிவிருத்தியடைய வேண்டுமென ஒரு லட்சத்து 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் சிதறடிக்கப்பட்டன. பெரும்பான்மையினக் கட்சிக்கு ஒரு பங்கு. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஒரு பங்கு, சிறுசிறு கட்சிகளுக்கு ஒரு பங்கு என தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்துவிட்டனர்.

ஒரு பிரதிநிதியை உருவாக்கி அபிவிருத்திசெய்ய வேண்டுமென பலர் நினைத்துச் செயற்பட்டனர். கடந்த பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் சுமார் 31ஆயிரம் வாக்குகளை கருணாவுக்கு மக்கள் கொடுத்தனர். இந்த 31 ஆயிரம் மக்களும் ஏமாந்துள்ளனர் என்பது சாதாரணமே. ஏனெனில் தேசிய ரீதியாகச் செயற்பட்ட ஒரு தலைவரையே ஏமாற்றியவரை, நம்பி ஏமாந்ததற்கு யாரும் பொறுப்பல்ல - என்றார். (ப)

# தந்தை செல்வாவின் போராட்டம் தொடரும்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப்.28



தமிழ் மக்களுக்காக தந்தை செல்வா முன்னெடுத்து வந்த போராட்டத்தை மூன்றாவது தலைமுறையாகவும் முன்கொண்டுசெல்வோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.


தந்தை செல்வாவின் 44ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, களுவாஞ்சிக்குடி பகுதியில் குருதிக்கொடை நிகழ்வு நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமை கிடைக்கும் வரையில், நாடாளுமன்ற உறுப்பினராகவும், இளைஞனாகவும் நான் தொடர்ந்து போராடுவேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# உருளைக் கிழங்கு மீதான இறக்குமதி வரி அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 28

உள்ளூர் உருளைக் கிழங்குகள் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு மீதான வரி ஒரு கிலோவுக்கு 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் நள்ளிரவிலிருந்து இது நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)



# கிராமங்களுக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம்

## மக்கள் பரிதவிப்பு

கிளிநொச்சி, ஏப்.28

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்காடு மற்றும் மாயனூர் பகுதிகளில் தினமும் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துவருகின்றது. இதனால் நாம் சொல்லெனாத் துயரை எதிர்கொண்டுள்ளோம் என்று அந்தப் பிரதேங்களைச் சேர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

"நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் திடீரென அயலவர்களின் கூக்குரல் கேட்டது. வெளியில் சென்று பார்த்தபோது வீட்டுமுற்றத்தில் யானை நிற்பதை அவதானித்தேன். உடனடியாக அவ்விடத்திலிருந்து அயல் வீட்டுக்கு தப்பிச் சென்றேன். பின்னர் அயலவர்களின் உதவியுடன் யானையை விரட்டினோம். இதில்பயன் தரக்கூடிய பப்பாசி, தென்னை மரங்களுக்கும் அதிகமான வாழை, கற்றாழை மற்றும் பயன்தரக்கூடிய சிறு தானிய பயிர்களும் அழிவடைந்துள்ளன. இச்சம்பவம் தொடர்பில் உடனடியாகவே இரவு 11.30 மணியளவில் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தொலைபேசி மூலம் பலமுறை தொடர்புகளை ஏற்படுத்தியும், அவர்கள் சம்பவ இடத்துக்கு வரவேயில்லை" என்று பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்தார்.

நாங்கள் இயன்ற வரை போராடி, அதிகாலை 3 மணியளவில் தான் யானையை விரட்டினோம். எனினும் இனி என்ன நடக்கும் என்று செல்ல முடியாதுள்ளது. அச்சத்தின் மத்தியிலேயே வாழ்கின்றோம். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவருமே எம்மை வந்து பார்வையிடவில்லை. இழப்பீடு தொடர்பிலும் கலந்துரையாடவில்லை. யானை வெடிபோட்டவுடன் அந்த இடத்தைநோக்கி யானை பாய்ந்து வருகிறது. எனவே எமக்கு நிரந்தரமான ஒரு தீர்வை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவில் பெற்றுத்தர வேண்டும் - என்றனர். (ப-113)

# பிரான்ஸில் கழுத்தறுக்கப்பட்டு இலங்கைப் பெண் படுகொலை

பாரிஸ்,ஏப்.28

பிரான்ஸில் கழுத்தறுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சடலம், இலங்கைப் பெண்ணின் உடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

பிரான்ஸின் பரிஸ் நகரின் அர்னோவீல் பகுதியில் கடந்த மார்ச் 31 ஆம் திகதி கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டிருந்தது.

அந்தச் சடலம் பரிஸ் புறநகரான சார்ஸல் பகுதியைச் சேர்ந்த 40 வயதான இலங்கைப் பெண்ணின் உடையது என்பது தற்போது தெரியவந்துள்ளது. ஆனால் அவர் இலங்கைத் தமிழரா என்பதை உடனடியாக உறுதி செய்யமுடியவில்லை. அவரது பெயர் விவரங்களும் வெளியிடப்படவில்லை.

கொலை நடந்த நாளில் குறித்த பெண்ணுடன் தொடர்பிலிருந்தவர் எனக் கூறப்படுகின்ற இலங்கையரான ஆண் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், குறித்த சடலம் தொடர்பான விவரங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த நபர் அந்தப் பெண்ணை தானே கொலை செய்தமையையும் ஒப்புக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப-4)

# இத்தாலி, சவூதிக்கு தூதுவர்கள் நியமனம்

கொழும்பு,ஏப்.28

இத்தாலி மற்றம் சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கள டயஸ், இத்தாலிக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அனுமதியை நாடாளுமன்ற உயர்சபை வழங்கியுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஒட்டாவுக்கான தூதுவராக சுமங்கள டயஸ் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அவரை ஏற்பதற்கான அனுமதியை வழங்குவதில் கனடா பின்னடித்து வந்தது. இந்த நிலையிலேயே அவர் இத்தாலியின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சவூதிக்கான இலங்கையின் தூதுவராக கடந்த நவம்பர் மாதம் அகமட் ஏ. ஜவாத் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் அந்தப் பதவியை ஏற்காத காரணத்தால் பி.எம். அம்ஷா சவூதிக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ப-4)

# கண்ணியமான சமுதாயத்தை ஒன்றுபட்டு உருவாக்குவோம்

## சக்திகிரீவன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்.28

கண்ணியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம், இந்து சமயப் பேரவையின் தலைவர் சிவ சக்திகிரீவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:

மக்கள் முன்சென்று நான் நேர்மையானவன் என்று கூறும் துணிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். மக்கள் பணியில் ஈடுபடும்போது எமது நேர்மைத் தன்மைக்கு களங்கம் ஏற்படாதிருக்கப் பார்த்துக்கொள்வது மிக அவசியமானது. பலர் தம்மைக் காப்பாற்ற எம்மிடம் நற்சான்றுகள் பெறவருகிறார்கள். அப்போ நாடறிந்த ஊழல் பேர்வழிகளுக்கு எப்படி நற்சான்று வழங்க முடியும். குறைந்தது நாம் திருந்துவோம் என்றாவது நம் முன் கூறவேண்டாமா? மனிதன் குறைபாடு நிறைந்தவன் இதுவே யதார்த்தம். வாழ்நாள் முழுவதும் குறைபாட்டோடு வாழ்ந்து முடியக்கூடாது. வாழ்க்கையை அர்த்தமாக்க வேண்டும். ஊடகங்கள் நேர்மையான சமுதாயத்தை உருவாக்கத் துணிந்து செயற்பட வேண்டும். நாம் எதிர் வரும் நாள்களில் நடத்தும் சிவ பூஜா மாநாட்டில் இத்தகையோரைக் கௌரவிக்கவுள்ளோம். பணத்தைப் பெருக்குவதால் எதையும் சாதிக்க முடியாதென்பதை உணர்ந்து வாழ்வோமாக என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி சனசமூக நிகழ்வில் 300 பேர்

## நிர்வாக உறுப்பினர்கள் தனிமையில்

பருத்தித்துறை,ஏப்.28

**தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் வகையில் மாணவர்களை அழைத்து சமூகமட்ட நிகழ்வொன்றை மேற்கொண்ட அதிபர் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள் கட்டாயத் தனிமைப்படுத்தப்பட்டனர்.**

கொவிட் 19 விதிமுறைகளையும் தனிமைப்படுத்தல் சட்டத்தையும் மீறி சுகாதார பரிசோதகர்களின் அனுமதியின்றி 300 க்கு மேற்பட்டவர்களை ஒன்றுகூட்டி பருத்தித்துறை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

விழாவொன்று நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வை நடத்திய சனசமூக நிலைய நிர்வாகிகளை பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுதாகரன் மற்றும் ஜென்சன் றொனால்ட் ஆகியோர் இணைந்து தனிமைப்படுத்தியதுடன்,சன சமூக நிலையத்துக்கும் சீல் வைத்தனர்.

கொவிட் கட்டுப்பாட்டைமீறி முகக்கவசங்களை அணியாது பெருமளவானோர் குறித்த நிழ்வில் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நிகழ்வுக்கு சனசமூக நிலையப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் மாணவர்களும் இணைக்கப்பட்டு அவர்களுக்கு போட்டிகள் வைக்கப்பட்டன. இதற்கான அனுமதியை சுகாதாரப் பகுதியினரிடம் இருந்து பாடசாலை அதிபர் பெற்றிருக்கவில்லை.

குறித்த அதிபர் நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்திய சனசமூக நிலையத்தின் முக்கிய உறுப்பினராக உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பொறுப்பற்று செயற்படும் கற்றவர்களால் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொது அமைப்புகளாலும் தொடர்ச்சியாக கொவிட் கட்டுப்பாடு மீறப்படுகிறது என குற்றஞ்சாட்டப்படுகிறது. (ஐ-9)


# மக்களுடன் முரண்படும் ஜெயபுரம் பொலிஸார்

கிளிநொச்சி, ஏப்.28

கிளிநொச்சி ஜெயபுரம் கிராம அலுவலர் பிரிவு மக்களுடன் பொலிஸார் முரண்பாடுகளுடன் நடந்து கொள்கின்றனர் என்று பொதுமக்கள் சிலர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

ஜெயபுரம் கிராம அலுவலர் பிரிவில் நாச்சிக்குடா பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. இப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றுகின்ற பொலிஸார் நீண்ட காலமாக இடமாற்றம் வழங்கப்படாமல் பணியில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு துணைபோகின்றனர். மக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக ஒழுங்கான நடவடிக்கைகள் எடுப்பதில்லை. பொலிஸாருக்கு குற்றச் செயல்கள் தொடர்பாக தகவல்கள் வழங்கப்பட்டால் வழங்கப்படும் தகவல்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்குத் தெரிய வருகின்றது. ஜெயபுரம் கிராம அலுவலர் பிரிவில் இயங்குகின்ற பொலிஸ் நிலையத்தில் இருந்து நீண்ட காலமாக இடமாற்றம் வழங்கப்படாது உள்ள பொலிஸாருக்கு இடமாற்றங்களை வழங்கி புதியவர்களை நியமித்து மக்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கையை வடமாகாண பொலிஸ் உயரதிகாரிகள் எடுக்க வேண்டும் -என்றனர். (ஐ-13)



# சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்தும் பரீட்சைக்கு தோற்றிய பணியாளர்

மன்னார், ஏப்.28

மன்னாரில் சுய தனிமைப்படுத்தப்பட்ட மின்சார சபை பணியாளர் ஒருவர் பதவி உயர்வுக்கான பரீட்சையை தனிமைப்படுத்தப்பட்ட இடத்திலிருந்தே எழுதியுள்ளார்.

மன்னாரில் அண்மையில் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்ட மின்சார சபை பணியாளர்களுடன் நெருங்கிய தொடர்ப்பைப் பேணிய சக பணியாளர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டனர்.

சுய தனிமை படுத்தப்பட்டவர்களில் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுய தனிமைப்படுத்தப்பட்ட ஒருவர் தனது பதவி உயர்வுக்காக கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் பரீட்சைக்காக தோற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

தென் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் சுய தனிமைப்படுத்தப்பட்டதால், பரீட்சையையும், பதவி உயர்வையும் இழக்கும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டார்.

எனினும் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரது மனிதாபிமானச் செயற்பாடுகள் காரணமாக குறித்த பணியாளர் நானாட்டான் பிரதேசத்தில் உள்ள மோட்டக்கடை பகுதியில் சுய தனிமைப்படுத்தப்பட்ட இடத்திலேயே பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வினாத்தாள் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் உரிய அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ், சுகாதார நடைமுறைகளுடன் குறித்த மின்சார சபை பணியாளர் பரீட்சை எழுதியுள்ளார். (ஐ-56)

# பகிர்ந்து வாழும் பண்பு எமக்கு இருக்க வேண்டும்

**அருட்பணி அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளார் தெரிவிப்பு**

வெளிநாடுகளிலிருந்து எமக்கு உதவிகள் கிடைக்கின்றது என்றால் அது எமக்கு சுலபமாகக் கிடைக்கும் உதவிகள் அல்ல. மாறாக இவ்வாறான உதவிகள் புரியும் நல் உள்ளங்கள் பனி, குளிர் எனப் பாராது கஷ்டப்பட்டு உழைத்து அனுப்பும் உதவியாகவே இருக்கின்றது.

ஆகவே நாமும் இவர்களைப்போன்று எமக்கு கிடைப்பதில் எம்மிடன் இருப்பதை இல்லாதவர்களுக்கு பகிர்ந்துவாழும் பண்பை வளர்த்தக்கொள்ள வேண்டும் என தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளார் தெரிவித்தார்.

தலைமன்னாரில் இடம்பெற்ற ரயில் பஸ் விபத்தில் பாதிப்படைந்த மாணவர்கள் ஆசிரியருக்கு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை சீருடை, உபகரணங்கள் மற்றும் பண உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கனடாவில் உள்ள எமது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நண்பர்கள் மற்றும் மன்னார் நண்பர்கள் இணைந்த ஒன்றியமானது இன்று இவ் விபத்தில் பாதிப்படைந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பெருந்தொகையான உதவியை மேற்கொண்டுள்ளது.

உண்மையில் இது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். கனடாவிலுள்ள இந்த மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நண்பர்கள் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் அவர்கள், நான், எனது குடும்பம் எனப் பாராது தங்கள் சமூகத்தையும் நோக்கியவர்களாக இருப்பதாலேயே இவ்வாறான உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளனர். எமது சமூகத்தில் அக்கறை கொண்டு இவ்வாறான உதவிகளைச் செய்யும்போது நாமும் அவர்களைப்போன்று எம்மால் இயன்றவரை மற்றவர்களுக்கும் உதவிக்கரம் நீட்டுவதில் அக்கறைக் கொள்ள வேண்டும் என்றார். (ப-60)



கைதடி வீரகத்தி பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது அடியார்கள் அங்கப்பிரதட்சணம், காவடி மற்றும் பாற்செம்பு போன்ற நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ஐ-159)



# மாஸ்க் அணியாதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

வவுனியா,ஏப்.28

வவுனியாவில் முக்கவசம் அணியாமல் வீதிகளில் செல்வோருக்கு எதிராக பொலிஸார் கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

வீதிகளில் நடந்து செல்பவர்கள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் என்பனவற்றில் பயணிக்கும் போது உரிய முறையில் முகக்கவசம் அணிந்து செல்லாதவர்களுக்கு எதிராக நேற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஐ-110)



அமரர் சின்னத்தம்பு ஏகாம்பரத்தின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, அவரது குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில், அல்லையூர் அறப்பணி நிலையத்தின் ஏற்பாட்டில், தாய்த்தமிழ் பேரவை ஊடாக வவுனியா சிவபுரம் மற்றும் புதியகோயில்குளம் கிராமங்களைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ந-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளி மாவட்ட அரச ஊழியர்களுக்காக

# யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் சேவைகள் அதிகரிப்பு

**யாழ்ப்பாணம்,ஏப்.28**

**யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் சென்று கடமையாற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி, சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு, வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.**

சுகாதார அமைச்சின் கொவிட்-19 நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தும் வழிகாட்டலில் பஸ்களின் ஆசனங்களுக்கு அமையவே பயணிகளை ஏற்ற முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளிட்ட வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் ஆசிரியர்கள் அதிகாலை பஸ் சேவைகளையே பயன்படுத்துகின்றனர்.

அதனால் ஆசிரியர்கள் உட்பட அரச ஊழியர்கள் பஸ்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமானோர் ஏற்றப்படுகின்றனர். அரச ஊழியர்களின் பாதுகாப்பான போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு, பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்



மீசாலை வடக்கு வேம்பிராய் கான்றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் ஆலயத்தின் சிற்பரத வெள்ளோட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. (ச-159)



## நந்திக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி

### சமாசத் தலைவர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஏப்.28

முல்லைத்தீவு நந்திக்கடல், சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய பொறிமுறை அவசியம் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்றிக் ஜோன்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நந்திக் கடலில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி தொடர்கின்றது. வலை விரித்து மீன்பிடிக்க முடியாது. வலை வீசித்தான் மீன்பிடிக்க முடியும். ஆனால் நந்திக் கடலில் வலை விரிக்கப்பட்டு மீன்பிடிக்க நடைபெறுகின்றது. இது தடைசெய்யப்பட்ட தொழிலாகும். நந்திக் கடலில் தடைசெய்யப்பட்ட மீன்பிடிக்க தொடருமானால் நந்திக் கடலை நம்பியுள்ள 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசமும் மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களமும் இணைந்து சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஆனால் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தனியாக செயற்படுவதன் காரணமாக, சட்டவிரோத மீன்பிடியை நந்திக்கடலில் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சருக்கும் தகவல் தெரியப்படுத்தி உள்ளோம்- என்றார். (ப-13)



## நிலத்தை பண்படுத்திய பின் வயல் காணிகள் அடையாளம்

### விவசாயிகள் சிரமம்

கிளிநொச்சி, ஏப். 28

கிளிநொச்சி அக்கராயன் குளத்தில் சிறுபோக நெற்செய்கைக்காக நிலம் பண்படுத்தப்பட்ட பின்னர் வீதிகள், வாய்க்கால்களுக்கு என காணிகள் அடையாளப்படுத்தப்படுவதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழான வயல் நிலங்களின் வாய்க்கால்கள் மற்றும் வீதிகள் தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் தற்போது விவசாயிகள் சிறுபோகச் நெற்செய்கைக்காக நிலங்களைப் பண்படுத்திய பின்னர் குறித்த வயல் நிலப் பகுதிகள் வீதிகள், வாய்க்கால்களுக்குரியவை என அடையாளப்படுத்தப்படுவதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பயிர்ச் செய்கை இடம்பெறாத காலங்களில் குறித்த வீதிகள் மற்றும் வாய்க்கால்களுக்குரிய நிலங்களை அடையாளப்படுத்துவதன் மூலம் விவசாயிகள் தமது காணிகளை பண்படுத்த முடியும். தற்போது பெருமளவு பணம் செலவு செய்து வயல் நிலத்தைப் பண்படுத்திய பின்னர், குறித்த நிலம் வாய்க்காலுக்குரியது அல்லது வீதிக்குரியது என அடையாளப்படுத்தப்பட்டுள்ளதால் நாம் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். வயல் நிலங்களை சரியான முறையில் அளவீடு செய்து, எல்லைகளை இடுவதன் மூலம் பயிர்ச்செய்கைக் காலங்களில் விவசாயிகள் பாதிக்காத வகையில் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் எனவே சரியான அளவில் வேலைத் திட்டங்களை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் -என்றனர். (ப-13)

## ஊரியான் குளம் புனரமைப்புக்கு ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு

கிளிநொச்சி,ஏப்.28

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஊரியான் குளம், நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்பப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.

மிகவும் பழமை வாய்ந்த விவசாய பிரதேசமாக காணப்படுகின்ற ஊரியான் குளத்தை சீரமைத்துத் தருமாறு விவசாயிகள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்தக் குளம் சீரமைக்கப்படவுள்ளது.

நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சுமார் 10 மில்லியன் ரூபா செலவில் இதன் சீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதன் ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார். (ஐ-113)



# முல்லை. பூதன்வயல் கிராமத்துக்கு போக்குவரத்துச் சேவை வேண்டும்

### மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.28

முல்லைத்தீவு பூதன்வயல் கிராமத்துக்கு பஸ் சேவை நடத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள் என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி ரஜிதா செல்வராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; பூதன்வயல் கிராமத்துக்கு பஸ் சேவை இடம்பெறாததன் காரணமாக 2 கிலோமீற்றருக்கு அதிகமான தூரம் இக்கிராம மக்கள் நடந்து சென்று பஸ்களில் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. 219 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்துக்கு பஸ் சேவைகள் இடம் பெறுவதில்லை. முல்லைத்தீவுக் கும் முள்ளியவளைக் கும் இடையில் பூதன்வயல் கிராமத்துக்கான கொங்கிறீட் வீதி செல்கின்றது. இக்கிராமத்துக்குச் செல்வதற்கான வீதி நல்ல நிலையில் உள்ள போதிலும் பஸ் சேவைகள் இடம் பெறுவதில்லை. கிராம மக்கள் முல்லைத்தீவு பொது மருத்துவமனை, மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகம் என்பவற்றுக்கு செல்வதற்கு 2 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே பஸ்களில் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. எனவே முல்லைத்தீவு நக ரில் இருந்து பூதன்வயல் கிராமத்துக்கு பஸ் சேவை நடத்தப்பட வேண் டும் - என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. வன்னேரிக்குளம் கிராமத்தை உவர்ப் பரம்பலிலிருந்து பாதுகாக்குக

கிளிநொச்சி, ஏப்.28

**கிளிநொச்சி வன்னேரிக்குளத்தை உவர்ப் பரம்பலில் இருந்து பாதுகாப்பதற்கு கடந்த பத்தாண்டுகளில் எந்தவிதமான திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

1953ஆம் ஆண்டில் வன்னேரிக்குளம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. தற்போது 500 வரையான குடும்பங்கள் இக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றன. பூநகரியின் பல கிராமங்கள் உவரடைந்ததன் தொடர்ச்சியாக, வன்னேரிக்குளம் கிராமமும் உவர்ப்பரம்பல் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டு விட்டது. மண்டைக்கல்லாறு வழியாக பூநகரிக் கடல் நீர் உட்புகுந்ததன் காரணமாக வன்னேரிக்குளம் மற்றும் ஆனைவிழுந்தான் கிராமங்களில் தற்போது உவர்ப் பரம்பல் ஏற்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் வன்னேரிக்குளம் உவர்ப் பரம்பலைத் தடுப்பதற்கான கிராம மட்டத்திலான கூட்டமொன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் வன்னேரிக்குளம் மற்றும் ஆனைவிழுந்தான் கிராமங்களில் உவர்ப்பரம்பல் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களால் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர் என்ற தகவல் அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

இதனைக் கருத்திற்கொண்டு உவர்த் தடுப்பணை பெரிய அளவில் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் அக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது. எனினும் அக் கிராமத்தில் தீர்மானம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. 2000 ஆம் ஆண்டில் பூநகரி பல்லவராயன்கட்டு கிராமத்தில் உவர்ப் பரம்பல் ஆரம்பித்து, ஆரம்பத்தில் இதனைக் கட்டுப்படுத்தத் தவறிய தன் காரணமாக பல்லவராயன்கட்டு கிராம அலுவலர் பிரிவு தற்போது முழுமையாக உவரடைந்துள்ளது. இதுபோன்று வன்னேரிக்குளம் மற்றும் ஆனைவிழுந்தான் கிராமங்கள் அழிந்து விடாமல் பாதுகாப்பதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர். (ப-13)

# மாந்தை கிழக்குக்கான வழித்தட அனுமதி 10 ஆண்டுகளாக வழங்கப்படவேயில்லை

### தனியார் பஸ் உரிமையாளர்கள் கவலை

முல்லைத்தீவு, ஏப்.28

முல்லைத்தீவு- மாந்தை கிழக்குக்கான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுவதற்கு தயாராக உள்ள போதிலும் கடந்த பத்தாண்டுகளில் அதற்கான வழித்தட அனுமதிகள் வழங்கப்படவில்லை என தனியார் பஸ் உரிமையாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று வரையிலான தனியார் பஸ்கள் துணுக்காய் வரை பயணிக்கின்ற போதிலும் அவை துணுக்காயில் இருந்து 12 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மாந்தை கிழக்கின் பாண்டியன்குளம் வரை பணியில் ஈடுபட இணக்கம் தெரிவித்துள்ளன. இருப்பினும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் யாழ் கிளை இதற்கான வழித்தட அனுமதியை வழங்கவில்லை.

வடமாகாண வீதிகள் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் இவ் வீதிக்கான அனுமதி வழங்கப்படாததன் காரணமாக, யாழ்ப்பாணத்தில் இருந்து துணுக்காய் வரை செல்கின்ற தனியார் பஸ்கள் 12 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பாண்டியன்குளத்துக்கு இன்றுவரை செல்ல முடியாதுள்ளது.

மாந்தை கிழக்குக்கு தனியார் பஸ் செல்லாததற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் யாழ். கிளையும் வடமாகாண வீதிகள் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையுமே பொறுப்பேற்க வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களைக் கொண்டு, மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவு காணப்படுகின்ற போதிலும், தற்போது இலங்கை போக்குவரத்துச் சபையின் இரு பஸ்களே பணியில் ஈடுபடுகின்றன. இவை மக்களின் போக்குவரத்துக்கு போதுமானதாக இல்லை.

தனியார் பஸ்களுக்கும் வழித்தட அனுமதிகள் கிடைப்பதில்லை. எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் தனியார் பஸ்களுக்கான வழித்தட அனுமதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் -என்றனர்.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் மாந்தை கிழக்கின் நட்டாங்கண்டல் கிராமத்தில் இருந்து துணுக்காய்- அக்கராயன்- முக்கொம்பன்- பூநகரி வழியாக யாழ்ப்பாணத்துக்கு ஒருநாள் பயணித்த தனியார் பஸ் ஒன்றின் வழித்தட அனுமதிகள் மக்களின் நன்மை கருதாமல் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-13)



# மரக்கன்றுகள் நடுகை

யாழ்ப்பாணம்,ஏப்.28

வடமாகாணத்தில் அழிந்துவரும் மரங்களுக்கு பதிலாக புதிய மரங்களை மீள் உருவாக்கும் செயற்றிட்டத்தை பீதாம்பரம் அறக்கட்டளை நிதியத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

இதன்படி 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டம் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் ஊடாக இலுப்பை, மௌகனி பெரிய நெல்லி, மருது, தேக்கு ஆகியவற்றுடன் மா, பலா போன்ற மரக்கன்றுகளும் நடுகை செய்யப்படவுள்ளன.

பாடசாலைகள். கோவில்கள் மற்றும் பொது இடங்களில் குறித்த மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன. மரக்கன்றுகள் தேவையானோர் தொடர்பு கொள்ளுமாறு நிதியத்தின் தலைவர் கலாநிதி கா.பீ.ஜெயவிந்தன் அறிவித்துள்ளார். (ஐ-9)



மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தின் மலசலகூடத்துக்கு வர்ணம் பூசும் வேலைகள் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. இதற்கான நிதியுதவியை தெற்கில் வசிக்கும் க.கந்தசாமி வழங்கியிருந்தார். (ஐ-159)



# எலுமிச்சை செய்கைக்கு மக்களை ஊக்குவியுங்கள்

### மாங்குளம் பொது அமைப்புக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.28

முல்லைத்தீவு -மாங்குளத்தில் எலுமிச்சை பழ உற்பத்திக்கு ஊக்குவிப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி பொது அமைப்புக்கள் சில கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

1990ஆம் ஆண்டுக்கு முன்னர் மாங்குளம் நகர சூழலில் பெருமளவு எலுமிச்சைப் பழ உற்பத்தி இடம்பெற்று ஏற்றுமதிகளும் இடம்பெற்றன. தொடர்ச்சியான போர்ச்சூழல் காரணமாக மாங்குளத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தமையால், பராமரிப்பின்றி பெருமளவு எலுமிச்சை மரங்கள் அழிவடைந்தன. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் எலுமிச்சைப் பழ உற்பத்திக்கு ஊக்குவிப்புகள் வழங்கப்படவில்லை. சில தனி நபர்கள் எலுமிச்சை பழ உற்பத்தியில் ஈடுபட்டாலும் கூட, 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த எலுமிச்சைப் பழச்செய்கை போன்று தற்போது இல்லை. முல்லைத்தீவு விவசாயத் திணைக்களம் எலுமிச்சைப் பழ உற்பத்திக்கு சாதக நிலத்தன்மை கொண்ட மாங்குளத்தில் எலுமிச்சைப் பழ உற்பத்திக்கு கூடுதலான ஊக்குவிப்புகளை வழங்க வேண்டும். கடந்த காலங்களில் எலுமிச்சை தோட்டங்கள் அழிவுகளை எதிர்கொண்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதன் மூலமும் எலுமிச்சைப் பழச்செய்கையை ஊக்குவிக்க முடியும் -என்றனர். (ப-13)

# கிளிநொச்சி பிரமந்தனாறு மக்கள் நெருக்கடியின் மத்தியில் பயணம்

### கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஏப்.28

கிளிநொச்சி பிரமந்தனாறு கிராமத்தின் கொளுந்துப்பிளவு மற்றும் மயில்வாகனபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள், போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று, கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் திருமதி.த.செல்வராணி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

விசுவமடுச் சந்தியின் ஊடாக காலை 6.45 மணிக்கு பிரமந்தனாறு சந்திக்கு வருகின்ற பஸ் ஒன்று கல்லாறு செல்கிறது. மயில்வாகனபுரத்துக்கோ கொளுந்துப்பிளவுக்கோ குறித்த பஸ் வருவதில்லை. பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், கொளுந்துப்பிளவு ஆகிய கிராமங்களின் வீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவில் 741 குடும்பங்கள் வாழ்கின்றன.

மயில்வாகனபுரம் மற்றும் கொளுந்துப்பிளவு ஆகிய கிராமங்களில் மட்டும் 321 குடும்பங்கள் வாழ்கின்றன. பிரமந்தனாறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அரைநேரம் மட்டும் மருத்துவர் பணியில் உள்ளார். மிகுதி நேரங்களில் நோயாளர்கள் பதினைந்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ள தருமபுரம் மருத்துவமனைக்கே செல்ல வேண்டியுள்ளது.

இதேவேளை பிரமந்தனாறு பகுதியில் உப தபாலகம் இல்லாததன் காரணமாக மாதாந்த உதவித் தொகை பெறும் முதியவர்கள் தருமபுரம் உப தபாலகத்துக்கே செல்ல வேண்டி உள்ளது. எடுக்கின்ற உதவிப் பணம் போக்குவரத்திலேயே முடிந்து விடும். எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டும் என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 6 வருடங்களாக பயனற்ற நிலையில் மாயவனூர் ஏற்று நீர்ப்பாசன திட்டம்

## மக்கள் கவலை

**யாழ்ப்பாணம், ஏப்.28**

**கடந்த 6 வருடங்களாக பயனற்ற நிலையில் கிளிநொச்சி, மாயவனூர் ஏற்று நீர்ப் பாசனம் காணப்படுகின்றது என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாயவனூர் புழுதியாற்று குளத்தின் நீரைக்கொண்டு மாயவனூர் கிராமத்தில் விவசாய உப உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் நோக்குடன் 115 பயனாளிகளைத் தெரிவுசெய்து, 2015 ஆம் ஆண்டு 32 மில்லியன் ரூபா செலவில் வடக்கு மாகாண நிதியில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் குறித்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஓரிரு நாள்களில் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. குளத்திலிருந்து டீசல் இயந்திரம் மூலம் நீர்த்தொட்டிக்கு நீரை ஏற்றி விநியோகிக்கும்போது ஒரு மணித்தியாலயத்துக்கு 10 லீற்றர் வரையான டீசல் செலவாகியது. இந்த டீசல் செலவை பயனாளிகளிடம் அறவிடுவிட முடியாத நிலை காணப்பட்டது. அவ்வாறு அறவிட்டால் பயனாளிகளுக்கு உற்பத்தியை விட நீருக்கான செலவே அதிகமாக இருந்தது.

இதனால் நீருக்கான செலவை பயனாளிகள் செலுத்த முடியாத நிலை ஏற்பட ஏற்று நீர்ப்பாசனத்தை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்று 6 வருடங்களாக பயனற்ற நிலையில் குறித்த திட்டம் இருக்கின்றது. இது தொடர்பாக பல்வேறு தரப்பினரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தும் இதுவரை குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. மக்களின் கோரிக்கையாக நீரை ஏற்றும் இயந்திரத்துக்கு பதிலாக சூரிய மின்சாரத்தைக்கொண்டு குறித்த திட்டத்தை மீள நடைமுறைப்படுத்தினால் உச்ச பயனைப் பெறமுடியும். எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறித்த குளமும் நீண்ட நாள்களாகச் சீரமைப்பு இன்றிக் காணப்படுகிறது. அதனையும் சீரமைப்புச் செய்தால் மழை காலங்களில் அதிக நீரைச் சேமிக்க முடியும் - என்றனர். (ப-113)



## மொத்த வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை

வவுனியா, ஏப்.28

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் கொரோனாத் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டதைத் தொடர்ந்து மூடப்பட்டதையடுத்து அங்கு சென்று வந்த வவுனியாவைச் சேர்ந்த மரக்கறி மொத்த வியாபாரிகள் 112 பேருக்கு நேற்றுமுன்தினம் காலை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கொரோனாவின் மூன்றாம் அலைத் தொற்றையடுத்து தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் வவுனியாவில் இருந்து தம்புள்ளவுக்கு மரக்கறிகள், பழங்கள் என்பவற்றை கொண்டுசெல்பவர்கள் மற்றும் தம்புள்ளவில் இருந்து வவுனியாவுக்கு வந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஆகியோருக்கு வவுனியாவில் உள்ள மரக்கறி மொத்த விற்பனை நிலையத்தில் சுகாதாரத் துறையினரால் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (ப-18)



## ஊடகவியலாளர் அமரர் ரூபனுக்கு பொன்னாலையில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஏப்.28

ஊடகவியலாளர் அமரர் செ.ரூபனின் 11ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தில் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் தலைமையில் இடம்பெற்றது.


நிகழ்வில் ரூபனின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி இடம்பெற்றது. தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன. (ச-20)

## கண்டாவளைப் பகுதியில் கால்நடைகள் திடீர் இறப்பு

### உரிமையாளர்கள் கவலை

கிளிநொச்சி, ஏப்.28

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் கடந்த மூன்று தினங்களாக தினமும் கால்நடைகள் இறக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக இறக்கின்றனவா? அல்லது நோய்த்தாக்கம் காரணமாக இறக்கின்றனவா? என அறியமுடிந்துள்ளது என கால்நடை உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக கண்டாவளை கால்நடை வைத்திய அதிகாரியிடம் முறையிட்டபோது கால்நடை வைத்திய அதிகாரி நேரில் சென்று இறந்த கால்கடைகளைப் பார்வையிட்டார். இதன்போது இறந்த கால்நடைகள் பரிசோதனைக்கு உகந்த நிலையில் இல்லாது பழுந்தடைந்த நிலையில் காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (ச-113)



## காதர் மஸ்தானை புகழ்ந்தார் ஆயர்

வவுனியா,ஏப்.28

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் இன மத பேதங்களுக்கு அப்பால் நின்று மனிதநேயம் கொண்ட சேவைகளை ஆற்றுபவர். அவரிடம் நல்ல பல குணம்சங்களை நான் காண்கிறேன் என்று மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். செட்டிகுளம் பெரியகட்டு அந்தோனியார் ஆலய பகுதியில் சுமார் 8.2 கி.மீ நீளமான காப்பெற் வீதி அமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் எமது மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகளுக்கெல்லாம் செயல்வடிவம் கொடுத்து, மக்களின் தேவைப்பாடுகளை உணர்ந்து இன, மத, மொழி, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் சேவையாற்றி வருகின்றார் என்றும் அவர் தெரிவித்தார். (ப-4)



## குருதிக்கொடை முகாம்

வவுனியா,ஏப்.28

ஓமந்தை மத்திய கல்லூரியில் பாக்கியம் அறக்கட்டளை மற்றும் சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது ஏராளமான இளையோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர்.

நிகழ்வில் ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள்.பாக்கியம் அறக்கட்டளை அமைப்பினர், மற்றும் சுயாதீன தமிழ் இளைஞர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-110)

## திருக்கேதீச்சரத்தில் விசேட பூசை வழிபாடுகள்

வவுனியா,ஏப்.28

மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தில் சமூக இடைவெளியை பின்பற்றி நேற்றுமுன்தினம் சித்திரா பௌர்ணமி விசேட பூசை வழிபாடுகள் பிரதம சிவாச்சாரியார் கருணானந்த குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நாட்டு மக்கள் விடுபட்டு நலமுடன் வாழவும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-213)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மேற்பார்வையாளர் சேவைக்கு உள்வாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் -2021

வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக உரிய தகைமைகளைக் கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் நிரந்தர சேவையில் உள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவியணியினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல | பதவிப்பெயர் | வெற்றிடஎண்ணிக்கை |
|---|---|---|
| 01 | வேலை/வெளிக்கள மேற்பார்வையாளர் | 01 |
| 02 | சுகாதார மேற்பார்வையாளர் | 01 |

**02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்**

2.1. 01.01.2013 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட மேற்பார்வையாளர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைவாகவும். கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்டு 11.07.2019 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சேவைப்பிரமாணக்குறிப்பின் திருத்தங்களுக்கு அமைவாகவும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

2.2. இப்பதவி ஒரு வருட தகுதிகாண் காலத்தைக்கொண்டதும் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும்.

2.3. விதவைகள்/அனாதைகள்/தபுதாரர்கள் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

**03. அடிப்படைத் தகைமைகள்**

3.1. விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முந்திய 05 வருடகாலப்பகுதியில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும். (விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கேதுவாக வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுப்பு அல்லது கிராம அலுவலரால் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்)

3.2. நன்னடத்தை உடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

3.3. உள்வாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுவதனால் வயதெல்லை ஏற்புடையதாகாது.

3.4. 03/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக PL-1-2016, PL-2-2016, PL-3-2016 சம்பளக் குறியீட்டில் சம்பளத்தை பெறுபவராக இருத்தல் வேண்டும்.

3.5. பந்தி 3.4இல் குறிப்பிடப்பட்ட ஏதாவது ஒரு நிரந்தர பதவியில் விண்ணப்பமுடிவுத் திகதிக்கு முன்னர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் உடன் முந்திய 5 வருட காலப்பகுதியில் தொடர்ச்சியாக திருப்திகரமான 5 வருட சேவையினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அதுபற்றி திணைக்களத்தலைவர் /நிறுவனத்தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**04. கல்வித் தகைமை**

4.1. 01.01.2013 ஆம் திகதிக்குப் பின்னர் வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் நிரந்தர நியமனம் பெற்றவர்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் (G.C.E.O/L) இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகளுடன் மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.2. 01.01.2013ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் நிரந்தர நியமனம் பெற்றவர்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் (G.C.E.O/L) அல்லது தேசிய கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் (N.C.G.E) இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**05. சம்பள அளவுத்திட்டம்**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 25.02.2016ஆம் திகதிய 03/2016 இன் MN-1-2016 சம்பளத் தொகுதி இப்பதவிக்கு உரித்தாவதுடன் அதற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 27140-10x300-11x350-10x495-10x660-45540 ஆகும்.

**06. தெரிவு செய்யப்படும் முறை**

நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகைமைகள்.மேலதிக தகமைகள்.வேலை தொடர்பான அறிவு. மனப்பாங்கும் நடத்தையும் என்பவற்றிற்கு புள்ளிகள் வழங்கப்படுவதுடன் நேர்முகத்தேர்வில் அவர்கள் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் உயர் புள்ளி வரிசை ஒழுங்கில் நியமனத்திற்காக தெரிவு செய்யப்படுவர்.

**07.விண்ணப்பிக்கும் முறை**

7.1 வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் ரூபா 100.00ஐ செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

7.2 விண்ணப்பத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7.3 விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு செயலாளர். வலிகாமம் வடக்கு பிரதேச சபை. காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) என்ற முகவரிக்கு 12.05.2021 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

7.4 தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "மேற்பார்வையாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2021" எனக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கும் பதவியின் பெயரும் குறிப்பிடப்படவேண்டும்.

7.5 ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்கு பின்னரோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் அல்லது இந்நியமனம் இரத்துச் செய்யப்படும்.

7.6 ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வோர் பதவிக்கும் தனித் தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**திரு.இராமலிங்கம் பகீரதன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**
**28.04.2021**

# வன்னேரிக்குளம் ஆற்றுப்படுக்கைகளில் தொடர்கிறது சட்டவிரோத மணல் அகழ்வு

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை



கிளிநொச்சி,செப்.28

கிளிநொச்சி, வன்னேரிக்குளத்தின் ஆற்றுப்படுகைகளில் இருந்து தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; கடந்த பத்தாண்டுகளாக வன்னேரிக்குளத்தின் சூழலிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தொடர்கின்ற மணல் அகழ்வால் வன்னேரிக்குளத்தின் கீழான பயிர்ச்செய்கை பகுதிகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

வன்னேரிக்குளத்தில் இருந்து அகழப்படும் மணல், ஜெயபுரம் வழியாக வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றது. வன்னேரிக்குளத்துக்கு வருகைதரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோரிடம் இப்பிரதேசத்தில் நடைபெறுகின்ற மணல் அகழ்வு தொடர்பாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் செய்யப்பட்டும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. வன்னேரிக்குளத்தில் தொடர்கின்ற மணல் அகழ்வால் வன்னேரிக்குளம் மற்றும், ஜெயபுரம் கிராம மக்கள் எதிர்காலத்தில் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட முடியாத அளவுக்கு நிலைமை மோசமாகி வருகின்றது.

மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தாவிட்டால் எதிர்காலத்தில் இப் பிரதேசம் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத பகுதியாக மாறிவிடும். இதனை விட வன்னேரிக்குளம் மற்றும் தேவன்குளம் ஆகிய குளங்களின் அணைக்கட்டுகளுக்கும் ஆபத்துகள் ஏற்பட்டு வருகின்றன - என்றனர். (ஐ-13)

# தெல்லிப்பழை பிரதேசத்தில் விழிப்புணர்வுச் செயற்றிட்டம்



யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேசத்தில் கொரோனாத் தொற்று நோய்க்கு எதிரான விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று பொலிஸாரால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த ஹட்டகட்சியின் வழிகாட்டலில் தெல்லிப்பழை பொலிஸ் பரிசோதகர் மேர்சன் இந்துகசில்வாவின் தலைமையில் இந்த விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்களில் வர்த்தகர்கள் செயற்படும் விதம், பஸ்களில் பயணிப்பவர்கள் மற்றும் சந்தைகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது முகக்கவசம் அணியாதோர், பொலிஸாரால் கடுமையான எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (ஐ-26-20)



தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில், புலம்பெயர் தேசத்தில் வசித்து வரும் திலகராஜ், கிங்ஸ்சனின் பிறந்த தினத்தை முன்னிட்டு, புதுக்குடியிருப்பு செம்மன்குன்று கிராமத்தில் பெண் தலைமைத்துவ குடும்பத்தில் வசித்துவரும் பாடசாலை மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது. (ந-222)

# பொதுக்கூட்டமும் சபைத் தெரிவும்

வவுனியா,ஏப்.28

வவுனியா 2 ஆம் குறுக்குத்தெரு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டமும், தர்மகர்த்தா சபை தெரிவும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. இதன்போது தலைவராக சிவஸ்ரீ மு.இ.வைத்தியநாதக்குருக்களும்,செயலாளராக ரா.ரதீஷனும்,பொருளாளராக ச.சுதாகரனும் தெரிவு செய்யப்பட்டனர். உறுப்பினர்களாகப் பதிவாளளர் இ.ஜெயக்குமார், சட்டத்தரணி ம.சுதர்சினி, ப.சாயிதேவ்,த.கதிர்காமநாதன் மற்றும் த.குகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். வவுனியா பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தரின் பங்குபற்றுதலுடன் நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவலைகளில் ஐந்து ஆண்டுகள்



பிறப்பு 14 . 08 . 1943

இறப்பு 28 . 04 . 2016

அமரர் திரு. பொன்னு சிவப்பிரகாசம்

அப்பா எங்கள் இதயக் கோயிலில்
வாழும் அன்புத் தெய்வமே
ஐந்து ஆண்டுகள் ஆன போதிலும்
பரிதவிக்குதே இன்னும் எம் உள்ளம்
உங்களைக் காண ஏங்குது
- எம் உள்ளம்

எம் ஏக்கத்தை தீர்க்க
வருவீர்களா மண்ணுலகம்
தெய்வமாகி விட்ட எங்கள்
- அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தி பெற
- பிரார்த்திக்கின்றோம்

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
(ஜேர்மனி, அமெரிக்கா, சுவிஸ்)


# பயங்கரக் குற்றவாளிகள் 'பூஸா'வுக்கு மாற்றம்

கொழும்பு,ஏப்.28

நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில், தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 30 பயங்கரமான குற்றவாளிகள் 'பூஸா' உயர் பாதுகாப்புச் சிறைக்கு மாற்றப்படவுள்ளனர்.

'பூஸா' சிறைச்சாலையில் உள்ள செல்களின் எண்ணிக்கை 76 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்னதாக "பூஸா" சிறைச்சாலையில் 46 கைதிகளைத் தங்க வைக்கும் செல்கள் இருந்தன. தற்போது, கூடுதலாக 30 செல்கள் அமைக்கப்படுகின்றன.

அதற்கமைவாக மோசமான பாதாள உலக குற்றவாளிகள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களும் இந்தச் சிறைக்கு மாற்றப்படவுள்ளனர்.

'பூஸா' சிறைச்சாலையில் உயர் தொழில்நுட்ப கண்காணிப்பு உபகரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது, கஞ்சி பான இம்ரான், வெல சுதா, கொஸ்கொட தாரக மற்றும் பொடி லெஸி போன்ற கடுமையான குற்றவாளிகள் 'பூஸா' சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-4)




## பிற்போடப்பட்டுள்ளது

வவுனாவத்தை, துர்க்காபுரம் தெல்லிப்பழையை சேர்ந்த எமது குடும்பத் தலைவி

திருமதி சுப்பையா யோகமலர்

அவர்களின் 02.05.2021 அன்று நிகழவிருந்த 31 ஆம் நாள் அந்தியேட்டி நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

குடும்பத்தினர்
கணவர் : திரு. சின்னத்தம்பி சுப்பையா
மகள் : விஜையயாழினி ரவீந்திரன்
076 822 0870

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. நவரட்ணம் செல்வநாயகம் ஹண்ட்

மலர்வு 10.சித்திரை.1932

உதிர்வு 28 . சித்திரை .2020

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. பிறக்க ஒரு காலமுண்டு இறக்க ஒரு காலமுண்டு நட ஒரு காலமுண்டு நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு.

பிரசங்கி 3:1-2

என்றும் தங்களின் நினைவில்
மனைவி - கேட்ருட் ஞானதேவி செல்வநாயகம்
& குடும்பம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சண்முகம் குருகுலசிங்கம்

மூலத்தில் 26 . 09 . 1949

மறைவு 09 . 05 . 2020

அப்பா....
காற்றிலே கரைந்து ஓர் ஆண்டு ஒன்று
ஆகினாலும் உயிருக்குள் பத்திரமாய்த் தான் இருக்கிறீர்கள்
நினைவுகளில் வழி நடத்துகிறீர்கள்
வானில் மின்னும் நட்சத்திரங்கள் அத்தனையிலும்
உங்களைத் தானே தேடிக் கொண்டிருக்கிறோம்
என்றும் எம் எண்ணங்கள் உங்களை, சுற்றித் தான் அப்பா
கண்ணீரோடு வணங்குகிறோம்.

S.P.O. வளவு,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

பிள்ளைகள் ...
குடும்பத்தினர்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 23-06-1939

ஆண்டவன் அடியில் 02-05-2018

அமரர் நடராஜா தெய்வேந்திரம்

(Hardwares உரிமையாளர், கல்வியங்காடு)

திதி : துதியை

ஆண்டுகள் மூன்று ஆனதோ என் உயிரே!
ஆறாது உங்கள் பிரிவு என்னுள்ளே
அன்பும் அறிவும், பாசமும் கொண்ட பொக்கிஷமே
நிதமும் விழிநீர் வழிய புலம்புகின்றேன் உன் பிரிவால்
வீட்டிலே விடிவெள்ளியாய் மிளிர்ந்தாய்.
எம் விடியலுக்காய் அயராது உழைத்தாய்.
என்றும் விண்ணிலே தேவராய் இறையடி சேர
எம்பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

3ம் கட்டை,
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு

உன் பாசமிகு
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 27 - 12 - 1941

ஆண்டவன் அடியில் 09 - 05 - 2020

அமரர். இராசதுரை சறோஜினிதேவி


ஓராண்டு ஆனதம்மா
ஆறவில்லை எம் இதயம்
அன்பிற்கு இலக்கணமாய்
பண்பிற்கு சிகரமாய்
பாசத்துக்கு ஒளிவிளக்காய்
பாரினிலே எமை வளர்த்த
தெய்வமே எங்கள் அம்மா
கண்ணை இமை காப்பது போல்
எமைகாத்த எங்கள் அம்மா
கலையாத உங்கள் முகமும்
கள்ளம் இல்லாத உங்கள் சிரிப்பும்
நாங்கள் காண்பது எப்போது அம்மா
உங்கள் உருவம் மறைந்தாலும்
உங்கள் உயிர் எப்போதும் எம்மோடு
தான் இருக்கிறது அம்மா
எங்கள் அன்புத் தெய்வமே அம்மா
என்றும் உங்கள் பிரிவால் வாடும்

165, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திர மனிதனாகும் குழந்தைகள்



தாம் பெற்றெடுத்த குழந்தைகளை சான்றோராக்க வேண்டும் என்பது ஒவ்வொரு பெற்றோரின் நியாயமான ஆசையாகவும் கனவாகவும் இருக்கிறது. ஆனால் எத்தனை பெற்றோரின் கனவு நனவாகிறது? சில பெற்றோரின் குழந்தைகளே ஊர் மெச்சும் சான்றோராக உருவாகின்றனர். சான்றாண்மை என்பது பரீட்சையில் அதிக மதிப்பெண் பெறுவது மட்டுமன்று. நல்லறிவு, ஒழுக்கம் மற்றும் இயலாதவர்களுக்கு உதவுதல் போன்ற பல நற்குணங்களின் கலவையே சான்றாண்மையாகும்.

### நவயுகப் பெற்றோரும் குழந்தை வளர்ப்பும்

இன்றைய பெரும்பாலான பெற்றோர் தங்களது குழந்தைகள் சான்றோராக உருவாவதற்கு ஊரிலேயே அதிக கட்டணம் வசூல் செய்யும் ஒரு தனியார் பாடசாலை, குழந்தைகள் பொழுதுபோக்கி விளையாடி மகிழ ஒரு தொலைக்காட்சி, இணைய வசதியுடன் கூடிய ஒரு கணிப்பொறி மற்றும் ருசிப்பதற்கு கொழுப்புப் பண்டங்கள், புத்தம் புதிய ஆடை வகைகள் போன்றவையே போதுமென எண்ணுகின்றனர். இவைகளை ஏற்பாடு செய்து கொடுத்து விட்டாலே தங்களது குழந்தைப் பராமரிப்புப் பணி முடிந்து விட்டதாக நினைத்துக் கொள்கின்றனர். குழந்தைகளுடன் அமர்ந்து ஆக்க பூர்வமாக இன்றைய பெற்றோர்களில் பெரும்பாலானோர் உரையாடுவதில்லை.

நேரமின்மையைக் காரணமாக சொல்லும் இவர்கள் வீடுகளில் தொலைக்காட்சி, செல்லிடப்பேசி போன்றவற்றின் காலவரம்பற்ற பயன்பாட்டைக் குறைத்துக் கொண்டாலே அனைத்துக்கும் நேரம் கிடைக்குமே?

ஒரே அறையில் இருந்தாலும் அம்மா தொலைக்காட்சியிலும், அப்பாவும் பிள்ளைகளும் கணினியின் முன்பும் இருந்து பொழுதுபோக்குகின்றனர். மென்பொருள் உலகிலிருந்து இவர்கள் மீண்டு வருவது எப்போது? இன்றைய சிறுவர்கள் செல்லிடப்பேசியையே விளையாட்டு மைதானமாக ஆக்கிக் கொண்டதன் விளைவாக இளமையிலேயே உடற்பருமன், கண்பார்வைக் குறைபாடு, சுறுசுறுப்பை இழத்தல் போன்ற பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். கற்றலுக்கான அறை என்ற பெயரில் ஒரு தனி அறையில் மாணவர்களை அடைத்து விட்டு பக்கத்து அறையில் பெற்றோர் தொலைக்காட்சியை பலத்த ஒலியளவுடன் கண்டுகளிக்கும் வழக்கம் இன்று பெரும்பாலான குடும்பங்களில் உள்ளது. இது பிள்ளைகளுக்கு சலிப்பு உணர்வையும், கவனச் சிதறலையுமே ஏற்படுத்தும் என்பதைப் பெற்றோர் உணர்வதில்லை.

### அன்றும் இன்றும்

அன்றோ ஒரு குடும்பத்தில் குறைந்தபட்சம் ஐந்து பிள்ளைகள் இருந்தனர். ஆனால் இன்று ஒரு குடும்பத்தில் ஒன்றிரண்டு குழந்தைகளே இருப்பதால் குழந்தைகளின் தேவைகள் பெற்றோரால் எளிதில் பூர்த்தி செய்யப்பட்டு கூடுதல் செல்லத்துடன் வளர்க்கப் படுகின்றனர்.

இது ஒருபுறம் நல்லது போல தோன்றினாலும், மறுபுறம் அனைத்துமே எளிதில் கிடைப்பதால் பிள்ளைகளுக்குப் பொருள்களின் அருமை பெருமை தெரிவதில்லை. மேலும் அவர்களுக்கு பணத்தின் மதிப்பு, விலைவாசி ஏற்றம் பற்றியும் புரிவதில்லை.

மொத்தத்தில் பெற்றோரின் கஷ்டங்கள் பிள்ளைகளால் புரிந்து கொள்ளப்படவில்லை. ஒரு கிரிக்கெட் மட்டையை அப்பாவிடமிருந்து பெற மூன்று வருடம் காத்திருந்த காலம் முன்பிருந்தது. இன்றோ காலையில் கேட்கப்பட்ட பொருள் மாலையிலேயே பெற்றோரால் வாங்கித் தரப்படுகிறது. அதிகமாக செல்லம் கொடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டதன் விளைவாக பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்த காலம் போய், பெற்றோர் பிள்ளைகளுக்குக் கீழ்ப் படியும் காலம் உருவாகிப் போனது.

இன்றைய மாணவர்கள் பலர் அவர்களது அப்பா, அம்மா அழைத்தால் கூட திரும்பிப் பார்க்காமல் தொலைக்காட்சியிலோ, அல்லது செல்லிடப் பேசியிலோ மூழ்கிக் கிடப்பதைக் காண முடிகிறது.

இத்தகைய கீழ்ப்படியாத பிள்ளைகள், நாளை அவர் தம் சொந்த தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாமல் போவதுடன், தங்கள் பெற்றோருக்கும் பாரமாக இருக்க நேரிடும்.' ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது' என்பது நம் முன்னோர் அவர்தம் வாழ்க்கை அனுபவத்தின் வாயிலாக வகுத்த பழமொழி.

பாடசாலைகளில் நியாயமான காரணங்களுக்குக் கூட தமது செல்லப்பிள்ளைகளை ஆசிரியர்கள் கண்டிப்பதை விரும்பாத பெற்றோர், வீட்டிலாவது அவர்களை கண்டிப்புடன் வளர்க்க வேண்டியது மிக அவசியம். பிள்ளைகளை சான்றோராக ஆக்க பெற்றோர் தங்களது வாழ்க்கை அனுபவம், கடந்து வந்த பாதையின் கஷ்ட, நஷ்டங்கள் போன்றவற்றை வாழ்க்கைப் பாடமாக அவர்களுக்கு உணவு போல ஊட்ட வேண்டும்.

> **பிள்ளைகளை சான்றோராக ஆக்க பெற்றோர் தங்களது வாழ்க்கை அனுபவம், கடந்து வந்த பாதையின் கஷ்ட, நஷ்டங்கள் போன்றவற்றை வாழ்க்கைப் பாடமாக அவர்களுக்கு உணவு போல ஊட்ட வேண்டும். நம் முன்னோர்கள் வகுத்த வாழ்வியல் நெறிகள், நமது பாரம்பரியம், வேற்றுமையில் ஒற்றுமை காணும் நமது நாட்டின் தனித்தன்மை, போன்ற பல பொதுவான விஷயங்களை சிறுவர்களுக்குப் புகட்ட வேண்டியது பெற்றோரின் கடமை.**

நம் முன்னோர்கள் வகுத்த வாழ்வியல் நெறிகள், நமது பாரம்பரியம், வேற்றுமையில் ஒற்றுமை காணும் நமது நாட்டின் தனித்தன்மை, போன்ற பல பொதுவான விஷயங்களை சிறுவர்களுக்குப் புகட்ட வேண்டியது பெற்றோரின் கடமை.

இதனால் நாளைய சமுதாயத்தை பேதமற்ற சிறந்த மனிதாபிமானம் கொண்டதாக உருவாக்க முடியும். உலகின் சிறந்த நூல்களுள் ஒன்றாக கருதப்படும் திருக்குறள், ஏனைய பிற நீதி நூல்கள், செய்தித்தாளில் இடம்பெறும் அறிவியல், பொதுஅறிவு சார்ந்த உலகளாவிய நிகழ்வுகள் போன்றவற்றை வாசிக்கும் பழக்கத்தை சிறுவர்களுக்குப் பழக்கப்படுத்த வேண்டும். பல லட்சம் பேரை அறிவு ஜீவிகளாக மாற்றிய ஒரு பெருங்கருவி நல்ல புத்தகங்களே அன்றி வேறென்ன?

# வயல் விழா!



மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் இளம் விவசாயிகள் கழகத்துக்கென வழங்கப்பட்ட நெல் நாற்று நடும் இயந்திரங்களைப் பயன்படுத்தி செய்முறை ரீதியான முன்மாதிரி வயல் விழா நிகழ்வு கரியாலை நாகபடுவான் இடதுகரை கமக்காரர் பிரிவில், 12 ஆம் வாய்க்கால் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வானது முழங்காவில் விவசாயப் போதனாசிரியர் ம.மகிலன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து மாவட்ட நெல் தொடர்பான பாடவிதான உத்தியோகத்தர் [illegible] மற்றும் முழங்கா[illegible] சேவைகள் நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் க.கஜீபன், ஜெயபுரம் விவசாயப் போதனாசிரியர் நா.அஜந்தன் மற்றும் சக விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் பகுதி விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் நாற்றுநடுகையின் அவசியம் மற்றும் தொழில்நுட்பத் தகவல்கள் வழங்கப்பட்டன. இதில் தரமான விதை நெல்லை தரம்பிரிப்பதற்கான உப்பு நீர்ப்பரிகரணம் செய்முறையாக மேற்கொள்ளப்பட்டது. நாற்றுமேடையானது 14 நாள்கள் கொண்டதாகவும், பொலித்தீன், தட்டுக்கள் பயன்படுத்தியும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஏக்கர் ஒன்றுக்கு 16 கிலோகிராம் விதை நெல் மட்டும் அவசியமாகும். ஆக ஆரம்ப விதைப்பில் விவசாயிகளால் சாதாரணமாக 3 புசல் நெல் பயன்படுகின்றது. நாற்றுநடுகை மூலமாக விதை நெல் கொள்வனவுக்கு செலவளிக்கும் பணத்தில் மூன்றில் இரண்டு பங்கு மீதமாகின்றது. அத்துடன் களைக்கட்டுப் பாட்டுக்கென தாழ்நில ஊடு களைகட்டி பயன்படுத்த முடியும்.

எனவே தேவையற்ற விவசாயிகளை இரசாயனம் பயன்பாட்டை குறைக்க முடியும். பயிரிடை வெளியும் போதியளவில் காணப்படுகின்றபோது நோய் பீடைத் தாக்கம் ஒப்பீட்டளவில் குறைவாகும். நன்கு மட்டம் பெயருவதால் இறுதியில் விளைச்சல் அதிகரிக்கின்றது.

நெல்லை ஊறவிட்டு, உரியவாறு முளைகட்டிய பின்னர், வயல் களியைக் கொண்டு நாற்றுமேடைகளை தயார்செய்து நெல்லை இட்டு 14 நாள்கள் பராமரிக்க வேண்டும். தொடர்ந்து நன்கு சேறடிக்கப்பட்ட வயலில் நாற்றுக்கள் நடப்படும்.

இந்த நாற்றுக்களை முழங்காவில் மற்றும் ஸ்ரீ முருகன் பல்லவராஜன்கட்டு இளம் விவசாயிகள் கழகத்தின் அங்கத்தவர்கள் நடுகை செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறையின் நாட்டுக்கூத்து அடையாளம் அண்ணாவியார் டானியல் பெலிக்கான்

யோ.யோன்சன் ராஜ்குமார்,
திருமறைக்கலாமன்ற உதவி இயக்குநர்.

நாவாந்துறை மண்ணுக்குப் புகழ் சேர்த்த அமரர் அண்ணாவியார் டானியல் பெலிக்கான் அவர்களை கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அறிந்திருந்தேன். திருமறைக்கலாமன்றத்தின் கூத்துவிழாக்களை அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜாவுடன் இணைந்து பொறுப்பேற்று நடத்தியபோதே அவருக்கும் எனக்குமான உறவு ஆரம்பித்தது எனலாம். குறிப்பாக 2003 ஆம் ஆண்டு தேசியரீதியில் கூத்து விழாவினை நடத்தியபோது தென்மோடிக் கூத்து தொடர்பான கருத்தமர்வு ஒன்றினை செயலமர்வாக நடத்துவதற்காக அண்ணாவியாரை அணுகியபோது அவர் சம்மதத்துடன் அங்கு வந்திருந்த மட்டக்களப்பு, வன்னி, மன்னார், மலையக கலைஞர்கள் மத்தியில் யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து தொடர்பான சில பாடல்களை செய்து காட்டுகையாக அளிக்கை செய்து உதவினார். அதுமட்டுமன்றி அவ்வருடம் நாம் நடாத்திய கூத்துப் போட்டியில் புனிதவதி என்ற கூத்தை எமது போட்டிக்கு சமர்ப்பித்து முதல் இடம்பிடித்து, பலரது பாராட்டுக்களையும் பெற்றார்.

தொடர்ந்து யாழ்ப்பாணத்துத் தென்மோடிக் கூத்து தொடர்பான ஆய்வொன்றினை நாம் மேற்கொள்கையில், அவரை அணுகி தகவல்களைக் கேட்ட போது, தான் அறிந்து வைத்திருந்த தகவல்களை உளப்பூர்வமாகப் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து மன்றத்திலே கூத்து விழா ஒன்றிலே அவரைக் கௌரவித்தபோது அவரைப் பற்றிய விடயங்களை அவர் வாயிலாகக் உரையாடிப் பதிவு செய்தேன். அதுமட்டுமன்றி திருமறைக்கலாமன்றம் தென்மோடிக்கூத்தின் பாடல்களை அழிந்துவிடாது பாதுகாக்க வேண்டும் என்ற பேராவலுடன் 158 இராகங்களை இனங்கண்டு பதிவாக்கம் செய்தபோது அதன் தொகுப்பாளர்களாகிய அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜாவும், நானும் அவரை அணுகிய போதெல்லாம் பலவகையிலும் ஆலோசனைகளை வழங்கினார்.

அண்ணாவியார் பற்றி அதிகம் கேள்விப்பட்டிருந்தாலும் அவர் நெறிப்படுத்திய பல கூத்துகளை நேரடியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் அந்தக் குறையைத் தீர்ப்பது போல நாவாந்துறையில் அவருக்குக் கிடைத்த கலாபூசண விருதுக்கான பாராட்டு வைபவமொன்றில் அவர் பாடிய கல்வெட்டு சிந்து, சபையையே அதிர வைத்தது. அத்துடன் அவரது முழு ஆளுமையும் பறை சாற்றியது. அந்தவகையில் டானியல் பெலிக்கான் தனது ஒன்பது வயதில் ஏழு பிள்ளை நல்லதங்காள் என்ற இசை நாடகத்தில் நல்லதங்களின் மகளாக நடித்ததோடு அவரது கலையரங்கப் பிரவேசம் நிகழ்ந்தது.

தொடர்ந்து இசைநாடக மரபில் அவருக்கு ஆர்வம் இருந்தாலும் அதனைத் தொடரும் சந்தர்ப்பம் இல்லாது போயிருக்க வேண்டும். பின்னர் 23 வயதில் வீரத்தளபதி (செபஸ்தியர்) முழு இரவுக் கூத்தில் இளவரசன் பாத்திரத்தில் நடித்த பின்னரே இவரது தொடர் அரங்கச் செயற்பாடு ஆரம்பித்தது எனலாம்.

படிப்படியாக தனது கிராமத்தின் கூத்துக்களில் நடித்துப் பெயரெடுத்துக் கொண்டிருந்த பெலிக்கானுக்கு புலவர்களான சூசைப்பிள்ளை, கலைக்கவி, எஸ்தாக்கி ஆகியோர் சிறந்த வழிகாட்டிகளாக இருந்துள்ளனர். "செபஸ்தியார்" , "அலசு" போன்ற கூத்துக்கள் இவரைச் சிறந்த கூத்துக்கலைஞனாக கிராமத்தில் இனங்காட்டின. தொடர்ந்து இவர் அமரர் பூந்தான் யோசேப்புவின் பார்வையில் பட்டு விடுகின்றார். உண்மையில் பூந்தான் யோசேப்புவின் காலம் தென்மோடிக் கூத்து மரபின் பொற்காலம் என்று கூறலாம்.

யாழ். நவரச நாட்டுக் கூத்து கலாமன்றம் என்ற பெயரில் அமைப்பினை உருவாக்கி, பிரதேசங்கள் தோறும் சிறப்பிடம் பெற்ற கலைஞர்களை ஒன்றிணைத்து, கூத்துக்களை மிகச் சிறப்பாக மேடையேற்றியவர் அமரர் பூந்தான் யோசேப்பு. அவரது கூத்துக்களில் ஆளுமை மிக்க பல அண்ணாவிமார்கள் நடித்தார்கள். அப்படி ஒன்றிணைந்த கலைஞர்களின் சேர்க்கை அண்ணாவியாரைப் புடமிட்டது எனலாம்


நவரச நாட்டுக் கூத்துக் கலாமன்றத்தின் தேவசகாயம்பிள்ளை, அலங்காரரூபம், சஞ்சுவான், எஸ்தாக்கியார், மரியதாசன் , கருங்குயில் குன்றத்துக் கொலை, மனம் போல் மாங்கல்யம், சங்கிலியன் என பல கூத்துக்களில் டானியல் பெலிக்கான் முக்கிய வேடமேற்று நடித்தார். பக்கிரி சின்னத்துரை, பூந்தான் யோசேப்பு, ராசாத்தம்பி, வின்சன்டிபோல், செல்லையா, லூயிஸ், திருச்செல்வம், பொன்னுத்துரை, குணசிங்கம், சுவாமிநாதன்... என்று அக்காலத்தில் கொடிகட்டிப் பறந்த ஜாம்பவான்களுடன் இணைந்து அவர்களுக்குச் சளைக்காது பாடி கூத்துலகில் உயர் இடத்தைப் பெற்றார் டானியல் பெலிக்கான் .

பூந்தான் யோசேப்புடனான உறவு இவரை தேசிய அளவில் பாராட்டப்படுவதற்கு வழிகோலியது. மன்னார் மற்றும் கொழும்பு சரஸ்வதி மண்டபம் போன்றவற்றில் மேடையேற்றப்பட்ட போதும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட போதும் இவர் பலராலும் பாராட்டப்பெற்றார். நாடகக் கலைஞரும் அக்காலத்தில் வானொலி நிகழ்வுகளைத் தயாரித்தவருமாகிய தார்சியஸ் கலைமுகத்துக்கு நேர்காணலின் போது முக்கியமான அண்ணாவிமார்களில் டானியல் பெலிக்கானுடைய பெயரையும் குறிப்பிட்டுள்ளார்.

கூத்துக்களில் அதிகம் தேர்ச்சி பெற்று பல கூத்துக்களை நெறிப்படுத்தி அண்ணாவியாராகி உயர்நிலையை அடைந்தார். அவரது நெறியாக்கப் பணியில் தனியாக பெண்களுக்கென்று கூத்துக்களை மேடையேற்றினார். அதேபோல் இளைஞர்களுக்கும் பல கூத்துக்களை பயிற்றுவித்துள்ளார்.

தனது கிராமமான நாவாந்துறையில் மட்டும் கிராமங்கடந்து பூநகரி, முத்தரிப்புத்துறை, மன்னார், குமுழமுனை, மெலிஞ்சிமுனை இன்னும் பல இடங்களில் இவரது கூத்துக்கள் விஸ்தரிக்கப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கான தமிழ்த் தினப் போட்டிகளில் நாவாந்துறை றோ.க.த.பாடசாலை, மன்னார் புனித சேவியர் கல்லூரி போன்றவை அந்த வகையில் அவரால் புகழடைந்தன.

இவரது புதல்வர்களான டானியல் அன்ரனி, டானியல் சௌந்திரன், டானியல் ஜீவா ஆகியோர் எழுத்தாளர்களாகவும் மிளிர்கின்றதற்கு இவரது கலைத் தொடர்பும் ஊக்குவிப்பும் காரணமாக இருக்கலாம். பாரம்பரியமான கூத்து பயில்வுள்ள கிராமத்தில் பிறந்து வளர்ந்து அந்த மரபை தானுங்கற்று தன்னை அத்துறையில் ஒப்பாரில்லா வகையில் வளர்த்து கற்றதனை இளைய சமூகத்துக்கும் கொடுத்து தனது கிராமங்கடந்தும் பணியாற்றி பலராலும் அறியப்பெற்று மிகவும் அமைதியாக விடைபெற்றுள்ள அண்ணாவியார் டானியல் பெலிக்கான் , கூத்து வரலாற்றில் முக்கிய இடம்பிடித்து நிற்பதுடன் நாவாந்துறையின் நாட்டுக்கூத்து மரபுக்கு ஒரு அடையாளமாகத் திகழ்கின்றார். அவரது கலைமரபு தொடர்ந்தும் அவரது கிராமத்தில் பேணப்படும் பயிலப்படுவதுமே அவரது ஆத்மாவுக்கான பிரதிக்கடன்.





## மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

பளை இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு வித்தியாலயத்தின் சிவன் ஆலயத்தில் அதிபர் க.ஞானசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர், பளை கோட்டக் கல்வி அலுவலர் மற்றும் பளை மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-159)



## கட்டடத் திறப்பு விழாவும் கண்காட்சி நிகழ்வும்

அளவெட்டி முற்போக்கு முன்பள்ளியின் சீரமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா, பாடசாலையின் முன்னாள் ஆசிரியை கௌரவிப்பு, சிறுவர்களின் கண்காட்சி மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வு என்பவை கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலர் செ.சிவஸ்ரீ கலந்துகொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைத்து கண்காட்சியை பார்வையிட்டார்.

(ச-36)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட மேலும் சிலர் கைதுசெய்யப்படுவர்

## மொட்டுக் கட்சி எம்.பி சஹான் பிரதீப் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.28**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் மேலும் சிலர், எதிர்காலத்தில் கைதுசெய்யப்படவுள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சஹான் பிரதீப் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

குற்றப் புலனாய்வு பிரிவு மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைக்கமையவே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீன் கைது செய்யப்பட்டுள்ளார். மாறாக ஏதேச்சையாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்ய வேண்டிய தேவை அரசுக்கு இல்லை. எதிர்காலத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் பலர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்படவுள்ளனர். பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான கத்தோலிக்க மக்களுக்கு ஜனாதிபதி உள்ளிட்ட அரசு நியாயத்தை வழங்கும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் உள்ளது. அதனை நிறைவேற்ற படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே ரிஷாத் பதியூதீன் கைது செய்யப்பட்டமை அரசியல் பழிவாங்கல் அல்ல. அவர் தாக்குதலுடன் தொடர்புபடவில்லையாயின், அவருக்குப் பிணை வழங்கப்படும். அவர் சம்பந்தப்பட்டிருந்தால் அவருக்கு தண்டனை வழங்கப்படும்- என்றார். (ப)

# மஹிந்த ராஜபக்ச நேர்மைமிக்கவர்

### மஹிந்த தம்ம ஜோதி தேரர் புகழாரம்

கொழும்பு,ஏப்.28

பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேர்மையானவர் என்பதால், நாட்டு மக்கள் அனைவரும் 'மஹிந்த மஹத்தயா' என்று அவரை அன்புடன் அழைக்கின்றனர். ஒரு சிறந்த பௌத்த தலைவர் என்ற அடிப்படையிலும் இந்த நாட்டில் அவருக்கு நற்பெயர் உள்ளது. இவ்வாறு களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாலி மற்றும் பௌத்த கல்வி முதுகலை நிறுவனத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட பேராசிரியர் மெதவாச்சியே தம்மஜோதி தேரர் தெரிவித்தார். அலரி மாளிகையில் நடைபெற்ற 209 ஆவது தர்ம உபதேச நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தேசியத் தலைவர்கள் மத்தியில் நமக்குள்ள தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவே. அவர் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க அன்று அதிரடித் தீர்மானம் மேற்கொண்டார். போர் நிறைவடைந்த பின்னர் ஏற்பட்ட பொருளாதாரச் சவால்களைச் சமாளித்து நாடு முன்னேற்றமடைந்து வந்தது. ஆனால் இந்த கொவிட் தொற்று நிலைமை காரணமாக எமது நாடு மட்டுமல்ல, உலகம் முழுவதுமே பாதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தருணத்தில் ஆட்சியாளர்களுக்கு உதவும் வகையில் மக்கள் செயற்பட வேண்டும்- என்றார். (ப-4)

# பழிவாங்கும் அரசியலால் நாட்டுக்கு பெரும் ஆபத்து

### ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.28

இந்த நாட்டில், பழிவாங்கும் அரசியல் கலாசாரத்தை நாங்கள் இல்லாமலாக்க வேண்டும். இந்த நிலைமை தொடருமாக இருந்தால், இது நாட்டின் எதிர்காலத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது சாதாரண மக்களின் உரிமைகளுக்கே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால், எமது சந்ததியினருக்கு அடிமைத்தனமான எதிர்காலத்தையே உரிமைகளாக்க நேரிடும். அரசு மனிதாபிமானமற்ற முறையில் செயற்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாயை மூட முயற்சிக்கின்றது. யாராவது தவறு செய்திருந்தால், அவர்களைக் கைதுசெய்வதற்கு அல்லது விசாரணைக்கு அழைப்பதற்கு நாட்டில் முறையான சட்டம் இருக்கின்றது.

எனினும் ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் ரிஷாத் பதியுதீன் பொறுப்புக்கூற வேண்டியவராகத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அரசு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வாயை மூடிவிட முயற்சிக்கக்கூடாது. இது இலங்கையின் ஜனநாயகத்தின் இருப்புக்கே அச்சுறுத்தலாகும். என்றார்.(ப-4)

# திறன் மேம்பாட்டு தசாப்தத்தில் இளைஞர்களுக்கு முக்கிய இடம்

### பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.28

2021-2030ஆம் ஆண்டு வரையான காலத்தை திறன் மேம்பாட்டு தசாப்தமாக அரசு அறிவித்துள்ளதால், எங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் இளைஞர்களுக்கு மிக முக்கியமான இடம் உண்டு.

பிராந்திய உறவுகளை வலுப்படுத்தவும் நாங்கள் ஆர்வமாக உள்ளோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

கடந்த காலத்தில் கொவிட்19 பரவலைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை முன்னேற்றத்தை வெளிப்படுத்தியிருந்தது. இலங்கை ஒரு வலுவான பொதுச் சுகாதாரத் திட்டத்தைக் கொண்டுள்ளது. இலவச சுகாதார வசதிகள் தொற்றுநோயைக் கட்டுப்படுத்த உதவியது. கடந்த பெப்ரவரி மாதம் எமது அரசால் ஒரு லட்சம் இலங்கையர்களுக்கு தடுப்பூசி வழங்க முடிந்தது.

இந்தப் பின்னணியில், தொற்றுநோய் இருந்தபோதிலும், பல துறைகளின் ஊடாக பொருளாதார நடவடிக்கைகளை பராமரிக்க நாங்கள் பணியாற்றியுள்ளோம். இலங்கை மத்திய வங்கி மக்களுக்கு கடன் நிவாரணம் வழங்குவதற்காக பல மீள் நிதியளிப்பு திட்டங்களை செயற்படுத்தியது. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு எனது தலைமையின் கீழ் ஒரு உள்ளக அமைச்சுக்களின் வழிநடத்தல் குழு நிறுவப்பட்டுள்ளது - என்றார். (ப)

# ஆட்சியின் முறைகேடுகளுக்கு ரிஷாத்தின் கைது எடுத்துக்காட்டு

### ஹுனைஸ் பாரூக் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப்.28

நாட்டின் சட்ட ஆட்சி முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது என்பது, மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் கைது மூலம் தெளிவாகின்றது. இந்த கைது வேதனைக்கும், கண்டனத்துக்குமுரியது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

புனித ரமழான் மாதத்தில், தஹஜ்ஜத்துடைய தொழுகையை நிறைவேற்றுகின்ற நேரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை சபாநாயகரின் அனுமதியையோ, நீதிமன்றத்தின் உத்தரவையோ பெறாமல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி, பெரும் குற்றவாளியைப் போல் கைதுசெய்யப்பட்டதையிட்டு வேதனை அடைகின்றேன். இவ்வாறான நடவடிக்கைகள் மிக்க முறைகேடானவைகள்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் முன்னர் கைதுசெய்யப்பட்டு, குற்றமற்றவர் என்ற நிலையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அவ்வாறு இருக்க இப்போது நடைபெற்றிருக்கின்ற கைது, பேரினவாதிகளை சந்தோஷப்படுத்துவதற்கும், அரசின் மேல் அதிருப்தியடைந்திருக்கின்ற மக்களைத் திசை திருப்புவதற்குமான கைதாகப் பார்க்கப்படுகின்றது.

தேர்தல்களை நோக்கமாகவும், தனது சுய இலாபங்களை நோக்கமாகவும், பெரும் பிழையை மூடிமறைக்கத் தயார்செய்யப்பட்ட நாடகமாகவுமே இவ்வாறான கைதுகள் பார்க்கப்படுகின்றன- என்றார். (ப-56)

# ரிஷாத் பதியுதீனின் கைது கடும் கண்டனத்துக்குரியது

### கொள்கை பரப்புச் செயலாளர் கவலை

கொழும்பு, ஏப்.28

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனின் கைது மன வேதனையானதும் கண்டனத்துக்குரியதும் என மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளரும் கிண்ணியா நகரசபை உறுப்பினருமான எம்.எம். மஹ்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த இந்த அரசு அவை நிறைவேற்றப்படாத நிலையில் துறைமுக நகரம், சீனி இறக்குமதி, கொரோனா, ஈஸ்டர் தாக்குதல் போன்ற நிகழ்வுகளால் தற்போது பெரும் விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் ஆளாகியுள்ளதோடு அரச கூட்டணிக்குள்ளும் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றை திசை திருப்புவதற்காகவும் பெரும்பான்மை மக்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காகவுமே இவ்வாறான கைதுகள் அரங்கேற்றப்படுகின்றன.

ஈஸ்டர் தாக்குதலோடு எந்த சம்பந்தமும் இல்லாமலிருந்தும், வேண்டுமென்று நோன்பு நோற்கத் தயாராக இருந்த வேளை சட்ட நியதிகளுக்கும் மனித நேயத்துக்கும் அப்பால் ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்ட முறை மையானது மனிதாபிமானமற்ற, மன வேதனையான கண்டனத்துக்குரிய செயலாகும் -என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்



**மேடம்:** எதிர்பாலினரிடம் பழகும்போதும், பேசும்போதும் கவனம் தேவை. திருப்தியான நாளாகும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். பணிகளில் நிதானமாக செயல்படுவது நல்லது.

**இடபம்:** முயற்சிகளில் வெற்றி வரும். எதிர்பார்த்த நன்மை நிகழும். குடும்பக் கவலைகள் மறையும். செலவை சமாளிக்க முடியும். பணவரவு நன்றாக இருக்கும்.

**மிதுனம்:** ஆன்மிக எண்ணங்கள் உருவாகும். தேவையற்ற பயம் தீரும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டு. கனவு நனவாகும். இளைஞர்களுக்கு சிறிய வெற்றி ஏற்படும்.

**கடகம்:** அலுவலகத்தில் உள்ள நிலுவைப் பணிகளை முடித்துக் காட்டுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். பகையைவிடுத்து நட்பாவது பற்றிச் சிந்திப்பீர்கள். லாபம் உயரும்.

**சிம்மம்:** மதிப்பும், மரியாதையும் கூடும். பிறரது செயல்கள் கோபத்தைத் தூண்டலாம். நிதானமாக செயல்படுவது நன்மையை தரும். திறமை கூடும். மனஸ்தாபங்கள் நீங்கும்.

**கன்னி:** வேண்டப்பட்டவரின் உடல்நலம் மேம்படும். வீடு கட்டுவீர்கள். எந்த பிரச்சினையையும் சமாளிக்கும் தைரியம் ஏற்படும். வசதியான வீட்டுக்கு மாறுவீர்கள். கடன்கள் இனி இல்லை.

**துலாம்:** இதுவரை கஷ்டப்படுத்திய மேலதிகாரி மாற்றலாகிச் செல்வார். கொஞ்சம் சேமிக்க முடியும். கற்பனை பயங்களால் சிரமப்படுவீர்கள். பணிகளில் இறுக்கமான சூழ்நிலை நீங்கும்.

**விருச்சிகம்:** இடமாற்றம் உண்டாகலாம். பணிகளை முயற்சியால் முடிப்பீர்கள். மற்றவருக்காக கூடுதல் உழைப்பை வெளிப்படுத்துவீர்கள். கடந்த காலக் கவலைகள் திடீரென்று காணாமல் போகும்.

**தனுசு:** கற்பனை வளம் அதிகரிக்கும். காதல் கைகூடும் வாய்ப்புள்ளது. முந்தைய முயற்சிகளில் முன்னேற்றமான புதிய வழி கண்டறிவீர்கள். சிலர் பணியிட வாய்ப்பை பயன்படுத்தி முன்னேறுவார்கள்.

**மகரம்:** மனஇறுக்கம் தீர்ந்துவிடும். தன்னம்பிக்கையுடன் இருங்கள். மின்சாரம் மற்றும் இயந்திரங்கள் பற்றி எச்சரிக்கை தேவை. பணியிடப் பொருளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம்.

**கும்பம்:** மேலதிகாரி உங்கள் விருப்பமறிந்து நடந்து கொள்வார். மதிப்பு மிக உயரும். முயன்ற விஷயம் நல்லபடியாக நடைபெறும். இத்தனை நாள் பூர்வீகச் சொத்திலிருந்த வில்லங்கம் நீங்கும்.

**மீனம்:** தேங்கியிருந்த விஷயங்களை முயற்சித்து முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரிகள் வட்டிக்கு வாங்கியிருந்த கடன்களை அடைப்பர். சாதனைத் திருப்பம் உண்டாகும். சேமிப்பு கூடும்.

# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | | 1 | | | |
| 1 | 2 | 4 | 6 | | | | | |
| 6 | 8 | | | 9 | | | | |
| | 7 | | | | | | | |
| 2 | 9 | 1 | | 3 | | | 4 | |
| | | | | | 6 | 7 | 1 | 3 |
| | 6 | 9 | | | 8 | | | |
| | | 2 | 4 | | | | | 8 |
| | | | | | | 4 | 2 | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 5 | 6 | 2 | 7 | 1 | 8 | 4 |
| 2 | 1 | 8 | 4 | 3 | 5 | 9 | 6 | 7 |
| 7 | 6 | 4 | 1 | 8 | 9 | 5 | 3 | 2 |
| 4 | 2 | 6 | 8 | 1 | 3 | 7 | 5 | 9 |
| 5 | 8 | 1 | 9 | 7 | 4 | 3 | 2 | 6 |
| 3 | 7 | 9 | 5 | 6 | 2 | 4 | 1 | 8 |
| 6 | 9 | 7 | 3 | 5 | 8 | 2 | 4 | 1 |
| 1 | 4 | 3 | 2 | 9 | 6 | 8 | 7 | 5 |
| 8 | 5 | 2 | 7 | 4 | 1 | 6 | 9 | 3 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்க ளும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.

# நிஜத்தில் நான் கோமாளி இல்லை




விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'குக் வித் கோமாளி' நிகழ்ச்சி மூலமாக ரசிகர்களின் மனதைக் கவர்ந்தவர் புகழ். அவர் தமிழக இதழ் ஒன்றுக்கு தனது முன்னேற்றம் பற்றி பல விடயங்களை மனம் திறந்து கூறியிருக்கின்றார்.

கடலூரிலிருந்து சென்னைக்கு வந்து பல கஷ்டங்களை அனுபவித்தே இந்த நிலைமைக்கு வந்துள்ளேன் என்று கூறுகின்றார்.

'வரும்போது ஒரு நாள் சாப்பாட்டுக்குரிய பணத்துடன்தான் வந்தேன். சென்னையில் ஏறி இறங்காத இடம் கிடையாது. செய்யாதவேலை கிடையாது. எல்லா வேலையும் செய்து வயிற்றுப் பசியைப்போக்கினேன்.

தெரிந்தவர்கள் மூலமாக தொலைக்காட்சி அல்லது சினிமாவில் வாய்ப்புக்காக ஏங்கி அலைந்தேன்.

விஜய் தொலைக்காட்சியில் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. ஆனாலும் ஆரம்பத்தில் அதில் நான் வெளியேற்றப்பட்டேன். எனது முயற்சியை விடவில்லை. எப்படியாவது முன்னுக்கு வரவேண்டும் என்ற வெறியுடன் முயற்சித்தேன். மீண்டும் விஜய் தொலைக்காட்சியில் வாய்ப்பு கிடைத்தது. இந்த முறை அது எனக்கு வெற்றியைத் தந்தது. 'கலக்கப்போவது யாரு', 'சிரிப்புடா' மூலமாக எனது முகம் மக்களுக்குப் பிடித்துப்போனது. அதனால் 'குக் வித் கோமாளி'யில் வாய்ப்புத் தந்தார்கள். கிடைத்த வாய்ப்பை வீணடிக்கவில்லை.

நான் கார் வாங்கியபோது ரசிகர்களின் வாழ்த்து மழையில் நனைந்தே போனேன். இப்படி எனக்கு ரசிகர்களா என்று வியந்தேன். ஊரில் என்னை எல்லோரும் தூக்கிவைத்துக் கொண்டாடுகின்றார்கள். ஆனால் மனதில் எப்போதும் ஒரு கவலை. இப்போதும் சிலர் என்னைக் கோமாளி போலப் பார்க்கின்றார்கள். நான் நிஜத்தில் கோமாளி இல்லை' என்று கண்கலங்க பதிலளித்திருக்கிறார் புகழ்.

# விவேக் வீட்டில் இளையதளபதி

இளைய தளபதி விஜய், விஜய் 65 திரைப்பட படப்பிடிப்புக்காக ஜோர்ஜியாவுக்கு சென்றிருந்தார். நாடு திரும்பியதுமே மறைந்த நடிகர் விவேக் வீட்டுக்குச் சென்று ஆறுதல் கூறியுள்ளார்.

விவேக் உயிரிழந்த போது பல்வேறு நடிகர்கள், நடிகைகள் தங்களின் ஆழ்ந்த இரங்கலை சமூக வலைதளங்களில் தெரிவித்திருந்தனர். விஜய் மட்டும் ஏன் அமைதியாக இருக்கிறார் என்று கேள்வி எழுந்தது.

இந்த நிலையில் படப்பிடிப்பு முடித்து நாடு திரும்பிய கையோடு விவேக் வீட்டுக்குச் சென்ற விஜய், விவேக் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

சப்பாணி @manipmp · Apr 26

உதவி செய்யாவிட்டாலும்
பரவாயில்லை,
உதவி கேட்காமல் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் – 21 தாக்குதல் தொடர்பான உண்மையை பகிரங்கப்படுத்துவோம்

## ஆயர்கள் சபையை அழைக்கிறது எதிர்க்கட்சி

**கொழும்பு,ஏப்.28**

**நாட்டில் நடத்தப்பட்ட ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலின் உண்மைக் காரணிகளை, நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். இதற்கு எதிர்தரப்பினர் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு, அகில இலங்கை ஆயர்கள் சபையும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல, ஆயர்கள் சபையிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் கத்தோலிக்க ஆயர்கள் சபை தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்று இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், குண்டுத்தாக்குதலின் உண்மை சூத்திரதாரி கண்டறியப்படாமல் இருப்பது கவலைக்குரியது.

குண்டுத்தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி, உள்ளிட்ட அனைத்து காரணிகளையும் கத்தோலிக்க மக்கள் மாத்திரமல்ல, ஒட்டுமொத்த மக்களும் அறிந்துகொள்வது அவசியமாகும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலின் பின்னணியில் உள்ள மர்ம ரகசியத்தை வெளிக்கொண்டு வர எதிர்த் தரப்பினர் குரல் கொடுக்கின்றனர். உண்மைக் காரணிகளைப் பகிரங்கப்படுத்துவதை விடுத்து அரசு எதிர்த்தரப்பினரை அடக்க முயற்சிக்கிறது. அதனால் சம்பவம் தொடர்பில் அகில இலங்கை ஆயர்கள் சபையுடன் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சை முன்னெடுக்க வேண்டும். அதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கிறோம்- என்றுள்ளது. (ப-4)

# உரம் விநியோகிப்பதில் புதிய பொறிமுறைகள்

முல்லைத்தீவு, ஏப்.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கான உரம் புதிய பொறிமுறைகளின் மூலம் வழங்கப்படுகின்றது.

கொவிட்19 அச்சுறுத்தல் காரணமாக விவசாயிகளை ஒரே தடவையில் கமநல சேவை நிலையங்களுக்கு அழைத்து உரங்களை வழங்குவதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது. சிறிய குளங்களின் கீழ் பயிர் செய்பவர்களுக்கு உரம் விநியோகிக்கப்பட்டிருந்தாலும் பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் பயிர் செய்பவர்களுக்கு உரத்தை விநியோகிக்கும் போது கூடுதலான விவசாயிகள் கமநல சேவை நிலையங்களுக்கு வருகை தருவதால் புதிய பொறிமுறை ஒன்றைப் பயன்படுத்தி உரத்தை விநியோகிப்பதற்கான முயற்சிகளில் கமநல சேவை நிலையங்கள் ஈடுபட்டுள்ளன. இது தொடர்பான தகவல்கள் கமக்கார அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கமக்கார அமைப்புகளுடன் விரைவாகக் கலந்துரையாடி உரத்தை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளில் கமநல சேவை நிலையங்கள் தற்போது ஈடுபட்டுள்ளன. இதே வேளை சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தமக்கு விரைவாக உரம் வேண்டும் என கமநல சேவை நிலையங்களை நாடி வருகின்றனர். பயிர்ச் செய்கை தொடங்கி ஒரு மாதம் கடந்தும் உரங்கள் தமக்கு கிடைக்கவில்லை என முல்லைத்தீவு விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ப-13)

# சிறுதானிய செய்கையாளர்களுக்கு தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.28

சிறுதானிய செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசனத்துக்கான உபகரணங்கள் மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளன.

சிறுதானிய செய்கையை ஊக்குவிக்கும் இந்த உபகரணத் தொகுதி 50 வீத மானிய விலையில் குடாநாட்டு செய்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் குறைந்தது கால் ஏக்கருக்கு மேல் சிறுதானிய செய்கையில் ஈடுபடும் செய்கையாளர்களுக்கு மாத்திரமே இந்தத் தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் மாவட்ட விவசாய திணைக்களம் மேலும் தெரிவித்தது. (ச-17)

# யாழ். குடாநாட்டு சந்தைகளில் மரக்கறி விலை திடீர் உயர்வு

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ். குடாநாட்டு சந்தைகளில் சித்திரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன என நுகர்வோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம், சங்கானை, சாவகச்சேரி, மற்றும் கொடிகாமம் ஆகிய சந்தைகளிலேயே மரக்கறி வகைகள் உச்ச விலையில் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மரக்கறி வகைகள் உடனடியாக விற்றுத் தீர்ந்தமையால் அவற்றுக்கு பற்றாக்குறையும் நிலவின எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)



# வீதியின் இரு மருங்கிலும் வாகனங்கள்; போக்குவரத்தில் கடும் நெரிசல்

## மக்கள் விசனம்

வவுனியா,ஏப்.28

வவுனியா சூசைப்பிள்ளையார் குளம் வீதியின் இரு மருங்கிலும் வீதி ஒழுங்குகளை பேணாமல் அதிகமான வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா பசார்வீதி ஒரு வழிப் பாதையாக மாற்றப்பட்ட நிலையில், நகருக்கு சென்றுவரும் மக்கள் சூசைப்பிள்ளையார் குளம் வீதியையே மாற்றுவழியாக பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் குறித்த வீதியின் இரு மருங்கிலும் அதிகமான வாகனங்கள் நிறுத்தப்படுவதால், போக்குவரத்தை மேற்கொள்வதில் அசௌகரியமான நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அந்தவீதியில் காட்வெயார்கள் மற்றும் மரக்காலை விற்பனை நிலையங்கள் அமைந்துள்ளமையால் அதில் பொருள்களை ஏற்றி இறக்குவதற்காக அதிகமான வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.



இதனால் போக்குவரத்து நெரிசலான நிலை ஏற்பட்டுள்ளதுடன், விபத்துச் சம்பவங்களும் பதிவாகிவருகின்றன.

பாடசாலை நேரங்களில் குறித்த வீதியைப் பயன்படுத்துவோர் கடுமையான அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். எனவே குறித்த வீதியில் சீரான போக்குவரத்து முறைமையை ஏற்படுத்துவதற்கு வவுனியா நகரசபை மற்றும் போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-110)

# கசிப்பு உற்பத்தி ஒருவர் கைது

கிளிநொச்சி,ஏப்.28

வட்டக்கச்சி பத்துவீட்டுத்திட்டப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்று ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 485 லீற்றர் கோடாவையும், 35 லீற்றர் கசிப்பையும் பொலிஸார் கைப்பற்றினர். சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸார், சந்தேகநபரை பொலிஸ் பிணையில் விடுவித்தனர். (ஐ-113)



# துறைமுக நகரத்தால் நாட்டுக்கு நன்மையே

## மஸ்தான் எம்.பி தெரிவிப்பு

வவுனியா,ஏப்.28

எங்கள் நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பாக அமையும் எந்தவிடயத்தையும் நாம் ஆதரிக்கமாட்டோம், எனினும் கொழும்புத் துறைமுக நகரம் நாட்டுக்கு நன்மையானது என்று எமக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுக நகரம் தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பாக அமையும் எந்த விடயத்தையும் நாம் ஆதரிக்கமாட்டோம். எனினும் இது தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எமக்குத் தெளிவூட்டப்பட்டுள்ளது. இதனால் 80 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளது. அதிகமான அந்நியச் செலவாணிகள் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மலேசியா உட்பட, பல நாடுகளில் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது ஒரு பாதிபுக்குரிய விடயமல்ல. அதன் வரைபுகள் தற்போது உயர்நீதிமன்றில் இருக்கின்றன. அவை திருத்தப்பட்டுவந்தால் மக்களுக்கு பாதிப்பில்லாத ஒரு நிலையில் இருக்கும் என எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்க்கட்சிகள் சொல்வதுபோல அச்சப்படுவதற்கு எதுமில்லை- என்றார். (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மான் இறைச்சி தருகிறேன் எனக் கூறி வவுனியாவில் பணம் மோசடி!

வவுனியா, ஏப். 28

மான் இறைச்சி தருகின்றேன் என்று தெரிவித்து நபரொருவர் பண மோசடியில் ஈடுபட்டார் என்று அவருக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா கூமாங்குளப் பகுதியிலேயே இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இரு நாள்களுக்கு முன்னர் நபர் ஒருவர் மான் இறைச்சி தருகின்றேன் என்றுகூறி அந்தப் பகுதி மக்கள் பலரிடம் பணம் பெற்றுள்ளார். ஆனாலும், பணம் பெற்றுக் கொண்ட மக்களுக்கு இறைச்சியை வழங்கவில்லை. அவர்களின் பணத்தை பெற்ற பின் இறைச்சியை கொடுக்காது ஏமாற்றியுள்ளார். இதனையடுத்து பாதிக்கப்பட்ட இருவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். குறித்த முறைப்பாட்டை பெற்றுக் கொண்ட வவுனியா பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மானை வேட்டையாடுவதற்கும் இறைச்சியாக்குவதற்கும் இலங்கையில் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-18)

# 260 கைதிகளுக்கு கொரோனா

கொழும்பு, ஏப்.28

நாடுமுழுவதும் உள்ள சிறைகளில் உள்ள 260 கைதிகளுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்தது. சிறைச்சாலைகளுக்குக் கொண்டுவரப்படும் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது என்றும், எவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டால் கந்தகாடு சிகிச்சை மையத்துக்கு அவர்கள் அனுப்பப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஏ-இ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு 22 - 06 - 1943



உதிர்வு 29 - 03 - 2021

அமரர் திருமதி

### பாக்கியலட்சுமி தனபாலசிங்கம்

( கச்சாய் தெற்கு வீரபத்திரர் ஆலய சாமியாரின் அன்பு மனைவி )

கடந்த 29.03.2021 திங்கட்கிழமை விண்ணுலகம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 26.04.2021 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன.

வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று ( 28.04.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைத்து அன்பர்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றுவதுடன் அதன்பின்னர் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு உங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்).

கச்சாய் தெற்கு, கொடிகாமம் — பிள்ளைகள், குடும்பத்தினர் 077 634 1284

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 05 . 1931



மறைவு 27 . 04 . 2021

### இளையதம்பி நாகலிங்கம்

காடிவளை இளவாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இளையதம்பி நாகலிங்கம் அவர்கள் நேற்று (27.04.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி விசாலாட்சி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதியரின் மருமகனும், அன்னலட்சுமியின் (பொன்னம்மா) அன்புக் கணவரும், வரதராஜா, அருந்தவராஜா, யோகராஜா, விஜிதா, வனஜா, ஆதிரையன் (ஆதி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், யோகராணி, மாலதி, யோகமதி, பாலராஜா, விஜேந்திரன், துளசி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நாகம்மா மற்றும் நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசேந்திரத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2021) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சேந்தாங்குளம் பாதர்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காடிவளை,
இளவாலை.

தகவல்: மனைவி
அன்னலட்சுமி (பொன்னம்மா)
021 225 2332

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 21 . 11 . 1934



இறைவன் அடியில் 09 . 05 . 2020

### அமரர் உயர்திரு முத்துவேலு சண்முகநாதன்

(தவம் J.P)

(முன்னாள் WRIT உடையார் பிரபல சமூக சேவையாளர்)

விரல் பற்றி நடைபழக்கி
வீரிட்டு அழுகையிலே தோள் மீது சுமந்து
அரவணைப்பும் கண்டிப்பும் சரிநிகராய்க் காட்டி
ஆசானை அண்டி அறிவு பல ஊட்டி
அகிலம் போற்றிட ஆளாக்கி வைத்த
எம் அன்பு அப்பாவே!
மண்ணுலக வாழ்வு போதும் விண்ணுலகில் வாழ்வேன்
என்று நீங்கள் சென்று
ஆண்டொன்று ஆகியும் கண்முன்னே நின்று
கவலையோடு களிப்பும் எமக்களிக்கிறீர்கள்
செவ்வனே எமை வழிநடத்திய உங்களை மறவாது
ஒவ்வோர் ஆண்டும் அவனடியை இறைஞ்சுவோம் அப்பா!

உணனை விழதனை வளவு
அற்கின்சன் வீதி,
வட்டுத் தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

மனைவி: ச.இராசலட்சுமி
கணேஸ்ஸகுமா[illegible]
கௌரி பவா[illegible]
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 . 06 . 1946



இறப்பு 28 . 04 . 2012

### புண்ணியமூர்த்தி வேலும் மயிலும்

அன்பாய் அரவணைத்து பாசமாய் பராமரித்து
கொட்டும் மழையிலும் கொளுத்தும் வெயிலிலும்
வெயிலில் எரிந்து குளிரில் உறைந்து
ஊணுறக்கம் இன்றி
உழைத்த செல்வங்களையும் பெற்ற செல்வங்களையும்
விட்டு விட்டு எதுவும் சொல்லாமல் சென்றதெங்கே.

அச்சத்தை நீரும் அழுக்கு போல் நீக்கி
உச்சத்தில் நல்லெண்ணம் நித்தமும் தேக்கி
விழுகின்ற மழைத்துளி போல எம்மை குளிர்வித்து
எங்கள் உறவிற்கு புது அர்த்தம் கற்பித்த அற்புதம் நீரே!!
உங்களிடம் கற்று கொள்ள நிறைய உண்டு
ஆனாலும் நீர் மனித கடவுளாய் வாழ்ந்து சென்று
ஒன்பது வருடங்கள் பூர்த்தியாகி விட்டன...

ஆறி வரும் புண்ணை ஆற விடாமல்
அனுதினமும் உங்கள் நினைவுகளுடன்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடக்கத்தை...

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் நாட்டில் 5 ஆயிரத்து 271 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ள நிலையில், நாடு மெல்ல மெல்ல முடக்க நிலைமையை நோக்கி நகர் கின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நாட்டில் கடந்த ஒரு வாரத்தில் மேற்கொள் ளப்பட்ட மொத்த பி.சி.ஆர். பரிசோதனை களில் 5.4 வீதமானோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நாளுக்கு நாள் இனங்காணப்படும் தொற் றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. அதையடுத்து நாட்டில் பல் வேறு கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன. அதிக தொற்றாளர்கள் இனங்காணப்படும் பகுதிகள் முடக்கப்பட்டு வருகின்றன. கடந்த சில தினங்களில் சுமார் 100 கிராம அலுவலர் பிரிவுகள் இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை, காலி, மாத்தளை, குரு நாகல், களுத்துறை மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளே அதிகம் முடக்கப்பட்டுள் ளன. குருநாகல் மாவட்டத்தில் குளியாப் பிட்டிய பொலிஸ் பிரிவிலேயே அதிகளவு கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத் தப்பட்டுள்ளன.

பொலநறுவை மாவட்டத்தில் சிறிகெத்த கிராம சேவகர் பிரிவும், மாத்தளை மாவட் டத்தில் பல்லேகும்புர கிராம சேவகர் பிரி வும், காலி மாவட்டத்தில் இரு பிரிவுகளும் நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப் படுத்தப்பட்டன.

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக் கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்ப டுகின்றது என்றும், நாட்டின் ஏதேனும் ஒரு பகுதியில் கொரோனாத் தொற்று அபாயம் இருப்பின் அந்தப் பகுதிகள் தனிமைப்படுத் தப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். (எ-44)

## முதல் நாளில்...

இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டு, மறு நாள் தொற்று இல்லை என்று அறிவிக் கப்பட்டுள்ளது. இதனால் கொரோனா பரி சோதனை முடிவுகள் தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் தனக்குத் தெரியாது எனவும் அது தொடர் பில் ஆராயப்படும் எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தாதிய உத்தியோகத்தரும் அவரது மனைவி யும் கொரோனாத் தொற்றாளர் ஒருவரின் முதல் தொடர்பாளர்கள் என்ற சந்தேகத்தில் பொதுச் சுகாதார பரிசோதகரால் அவர்க ளது பி.சி.ஆர். மாதிரிகள் 25ஆம் திகதி பெறப்பட்டிருந்தன. அதன் முடிவுகள் நேற் றுமுன்தினம் வெளியாகின. அதில் தாதிய உத்தியோகத்தருக்கு தொற்று உறுதிப்ப டுத்தப்பட்டிருந்தது. அவரது மனைவிக்கு தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் தாதிய உத்தியோகத்த ருக்கு நேற்றுமுன்தினம் மீளவும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை யால் இந்தச் சோதனை முன்னெடுக்கப்பட் டுள்ளது. இந்தப் பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகின. அதில் தாதிய உத் தியோகத்தருக்கு தொற்று இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு குழப்பத்தை ஏற்படுத் தியுள்ளது. கொரோனாத் தொற்று ஓர் நாளில் இல்லாமல் போகுமா என்ற கேள்வி முன்வைக்கப்பட்டுள்ளது. அல்லது மேற் கொள்ளப்படும் சோதனைகளில் தவறுகள் காணப்படுகின்றனவா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.

தாதிய உத்தியோகத்தருக்கு முதல் நாள் தொற்று ஏற்பட்டிருந்த நிலையில், வழமை யான நடைமுறைகளுக்கு அமைவாக அவர் கொரோனா மருத்துவ சிகிச்சை நிலையத்துக்கு கொண்டுசெல்லப்படாமல் மீளவும் சோதனை மேற்கொள்ளப்பட்டது ஏன் எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (ஓ.5.26

## சுழற்சி வேலை...

வகையில் பணிக்கு சமூகளிக்காது இருக்க முடியும். இந்த 8 நாள்களை ஊழியரின் விடுப்பில் இருந்து கழிக்காது வழங்க முடி யும் என்று அந்தச் சுற்றறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

சுழற்சி வேலை முறையில் வேலைக்கு அழைக்கப்படாத நாள்களிலும் ஒவ்வொரு அரச உத்தியோகத்தரும் இணைய வழியில் தமது பணிக் கடமையுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

மாதாந்த சுழற்சி வேலை முறையை உரு வாக்கிய பின்னர் உத்தியோகத்தர் ஒரு வர் சுழற்சி வேலை முறைக்கு இணங்க வேலைக்குச் சமூகமளிக்க வேண்டிய நாளொன்றில் சேவைக்குச் சமூகமளிக் காவிட்டால் மாத்திரம் அவரது தனிப்பட்ட விடுமுறைகளில் இருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அல்லது வேறு காரணங்க ளுக்காக சுழற்சி வேலை முறைக்குள் உள்வாங்கப்படாத உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் தொடர்பில் வழமையான விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த சுற்றறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக அரசால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள சுகாதார அறிவுறுத்தல்களுக்கும், எதிர்கா லத்தில் வெளியிடப்படும் சுகாதார அறிவு றுத்தல்களுக்கும் இணங்க தமது நிறுவ னங்களின் உத்தியோகத்தர்களைச் சேவை யில் ஈடுபடுத்துவது தொடர்பில் நிறுவனத் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்துவது அவசியமாகும் என்றும் அந் தச் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள் ளது. (எ)

## இரண்டாவது...

ராஜெனகா தடுப்பூசியின் 2 ஆவது டோஸ் இன்று புதன்கிழமை முதல் செலுத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசு மன தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியின் இரண்டாவது டோஸை செலுத்துவதற்குத் தேவையான 3 லட்சத்து 50 ஆயிரம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன. அதற்கமைவாக முதற்கட்டமாக சுகாதாரப் பிரிவினருக்கு முதலில் செலுத் தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்தியாவிலிருந்து தடுப்பூசிகள் கிடைப்பது தாமதமானதால் இரண்டாம் கட்டப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் எதிர்வரும் மே மாதம் முத லாம் வாரத்தில் இரண்டாம் கட்டத் தடுப்பூசி கள் ஏற்றும் பணிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் திடீரென அது முன்நகர்த்தப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ஓ.ப.4)

## வடக்கில்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்க லைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 499 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சாவகச்சேரி மருத்துவமனை வெளிநோ யாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளர் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற ஒருவ ருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பூவரசங்குளம் பிரதேச மருத்து வமனையில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ26)

## ஒட்சிசனுக்கு...

தெரிவித்துள்ளார் என அருண என்ற சிங் கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மருத்துவமனையின் பாவனைக்கு 80 ஒட்சிசன் சிலிண்டர்கள் உள்ளன எனவும் தற்போது நாள் ஒன்றுக்கு 150 சிலிண்டர் கள் வரையில் தேவைப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள 8 படுக்கைகளும் கொரோனாத் தொற்றா ளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிக்குள் மேலதிக சிலிண்டர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சு கூறியுள்ளது என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ.இ)

## கொரோனா...

தாகக் கொரோனாத் தொற்றுடன் கண்டறி யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் ஒரு நாளில் அதிக தொற் றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்ட சந்தர்ப்பம் இதுவாகும்.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 492 பேர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள் ளனர். 647 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக நாளாந்தம் இனங் காணப்படும் தொற்றாளர்களின் எண் ணிக்கை அதிகரித்து வருகின்றது. நேற்று முன்தினம் ஆயிரத்தை அண்மித்திருந்த இந்த எண்ணிக்கை, நேற்று ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. (எ-இ)

## துப்பாக்கி...

துப்பாக்கி வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். நாட்டுத் துப்பாக் கியை கையாள முற்பட்டபோது அது வெடித் தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குமுழமுனை, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே காயமடைந்துள் ளார். இவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்து வமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் சட்டவிரோத துப்பாக்கி வைத்திருந்தமைக்காக கைதுசெய்யப்பட் டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டுத் துப்பாக்கி மற்றும் அதற்குரிய குண் டுகள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவித்தனர். (எ-19)

## மரத்தில் இருந்து...

சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பாஸ்கரன் (வயது56) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி பூவரசு மரம் வெட்டிய போது தவறி வீழ்ந்து காயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற் கொண்டார். (எ-26)

## பாடசாலைகளுக்கு...

ருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித் தார்.

நாட்டில் தற்போது நிலவும் சுகாதார நிலை மையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டது எனவும் அவர் கூறினார்.

தமிழ், சிங்கள புத்தாண்டு விடுமுறைக்கு பின்னர் கடந்த 19 ஆம் திகதியே பாடசாலை களில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமா கின. கொரோனா வைரஸ் பரவும் அபாயம் இருப்பதால் கட்டம் கட்டமாகவே மாணவர் கள் பாடசாலைகளுக்கு வரவழைக்கப்பட் டனர் என்பதுடன், சுகாதார நடைமுறை ளும் முழுமையாக கடைப்பிடிக்கப்பட்டன. எனினும், நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாக பரவிவருவதால் மாணவர்களின் சுகாதார பாதுகாப்பைக்கருதி, இம் மாதம் 30 ஆம் திகதிவரை விடுமுறை வழங்குவ தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் நிலைமை குறித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் ஆராயப்பட்டது. அக் கூட்டம் முடிவடைந்த பின்னரே இத் தீர்மானத்தை அமைச்சர வைப் பேச்சாளர் ஊடகங்களுக்கு அறி வித்தார். அதேவேளை, பாடசாலைகள் மீள எப்போது ஆரம்பிக்கப்படும் என அறி விக்கப்படவில்லை. எனினும், சுகாதாரத் தரப்பினர் மீளாய்வுகளை மேற்கொண்டே அது தொடர்பில் முடிவெடுப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-44)

## நாடிக்கு...

மையாக எச்சரிக்கை செய்து விடுவித்தது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம்.

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் நேற்று ஊர்கா வற்றுறையில் சுகாதார விழிப்புணர்வு நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டது. முகக்கவ சம் அணியாமல் வர்த்தக மற்றும் பொது நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப் பாணத்துக்கு சேவையில் ஈடுபட்ட அரச பஸ்களில் பயணிகளும், நடத்துநரும் முகக்கவசம் அணியாதிருந்தமை அவ தானிக்கப்பட்டு அவர்களுக்கும் அறிவு ரைகள் வழங்கப்பட்டன.

அப்போது நடத்துநர் ஒருவர் முகக்கவ சத்தை நாடியில் அணிந்திருந்தார். அது தொடர்பில் அவருக்கு விளக்கமளித்த போது அவர் முரண்பட்டுள்ளார். அதை யடுத்து அவர் கைதுசெய்யப்பட்டு ஊர்கா வற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் சுகாதார விதிமுறைகளைப் பேணுகிறார்களா என் பதற்கான பொறுப்பு சாரதிக்கும் நடத்துந ருக்குமே உள்ளது.

வாயையும், மூக்கையும் மூடி அணிவது மட்டுமே முகக்கவசம். நாடிக்கு அணிந் திருப்பதை முகக்கவசமாகக் கருத முடி யாது. இவ்வாறு பொறுப்பற்ற விதமாகச் செயற்படுபவர்கள் சமூகத்தையும் அபா யத்தில் தள்ளி, தங்கள் குடும்பத்தவர் களுக்கும் துரோகமிழைக்கின்றார்கள் என்று நீதிவான் அறிவுரை வழங்கினார்.

முதலாவது தடவை என்பதால் நடத்துந ருக்கு எச்சரிக்கை வழங்கி நீதிமன்று விடு வித்தது. அத்துடன் இதுபோல் மீண்டும் நடந்தால் கடும் நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என்றும் அவருக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டது. (எ-இ)

## முகத்தை...

தடை செய்வதற்கு அமைச்சரவை அனு மதி வழங்கியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர வழங்கிய யோசனைக்கு அமைச்சரவை மேற்படி அனுமதியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ,44)

## விபத்தில்...

கடந்த 19ஆம் திகதி மருதனார்மடத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றபோது விபத் தில் சிக்கினார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை உயி ரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புத் துறைமுக நகருக்கு
# பிரபாகரனின் ஆளுகைக்குட்பட்ட அதிகாரங்களை விட அதிகம்!!!
## இப்படிச் சொல்கிறார் ரணில்



**கொழும்பு, ஏப். 28**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பிரதேசங்களில் காணப்பட்ட அதிகாரங்களை விட அதிகளவான அதிகாரங்களை கொழும்புத் துறைமுக நகரம் கொண்டிருக்கும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவுக்கு அனுமதி வழங்கப்பட்டால் அதற்கு வழங்கப்படும் அதிகாரங்கள் கட்டுமட்டில்லாதவை. பிரபாகரனின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களிலிருந்த அதிகாரங்களை விட அதிகமான அதிகாரங்கள் கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுவுக்கு கிடைக்கும். ஒரு நாடு ஒரு சட்டம் என்ற நிலைமை மாற்றப்பட்டு ஒரு நாடு இரண்டு சட்டம் என்ற நிலை உருவாகும், என்று ரணில் குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

## கூட்டு ஒப்பந்தம் ரத்தானதால் தொழிலாளர்களுக்கு அழுத்தம்
### ரமேஷ் பத்திரன தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.28

கூட்டு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால், பெருந்தோட்ட நிறுவனங்கள், தொழிலாளர்களுக்குத் தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாள் சம்பளத்தை வழங்க வேண்டும் என்று அரசு கூறிய போது, அதற்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனங்கள் சட்ட நடவடிக்கைகளில் இறங்கின. இதன் போது அரசு சட்ட ஆலோசனைகளைப் பெற்று, நீதிமன்றத்தினூடாகவே ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கூட்டு ஒப்பந்தம் இல்லை என்பதால், பெருந்தோட்ட நிறுவனங்கள் சில மேலதிகமாக 20 கிலோ தேயிலைக் கொழுந்தைப் பறிக்க வேண்டும் என்று தொழிலாளர்களுக்கு தேவையற்ற அழுத்தங்களை வழங்கி வருகின்றன.

மேலதிக கொழுந்து விவகாரத்தில் தொழிலாளர்களும், பெருந்தோட்ட நிறுவனங்களும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். இது தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் விரைவில் அரசு அறிவித்தலொன்றை விடுக்கும். பெருந்தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களுடன் சுமுகமான முறையில் செயற்பட வேண்டும். பெருந்தோட்ட நிறுவனங்களின் வருமானம் அதிகரிக்கும் வகையில் தொழிலாளர்களும் செயற்பட வேண்டும். அவ்வாறில்லை என்றால் பெருந்தோட்டத்துறைக்கும் குறிப்பாக தொழிலாளர்களுக்கும் இது பாதகமாக அமையும்- என்றார். (ப-4)

## ஐரோப்பிய தூதுவர்களுடன் சஜித் சந்திப்பு

கொழும்பு,ஏப்.28

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்களை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சந்தித்தார். எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ரமானியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

## மே மாத அமர்வில் ரணில் பங்கேற்பார்
### ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.28

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்த பொதுத்தேர்தலின் போது கிடைக்கப்பெற்ற தேசிய ஆசனத்தில் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

மே மாதம் நடைபெறவுள்ள அமர்வில் அவர் கலந்துகொள்வதற்கான இறுதிக்கட்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாத்திரமல்ல, ஆளும் கட்சியிலிருந்தும் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்குத் தீர்மானித்துள்ளேன் என்று கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களிடம் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ப-4)

## இலங்கை கடல் எல்லையில் கோடுபோட்டு கொரோனாவைத் தடுக்க டக்ளஸ் முயற்சி

கொழும்பு, ஏப்.28

கொரோனாத் தொற்று இந்தியாவில் தீவிரமாகப் பரவி வரும் நிலையில், இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பகுதிக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில், இந்திய - இலங்கை கடல் நடுவில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கைக் கடற்படைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்ளூர் மீனவர்கள் வைரஸை பரப்பக்கூடிய இந்திய மீனவர்களுடன் தொடர்புகொள்வதைத் தவிர்க்கும் வகையில் இந்தக் கண்காணிப்பு பொறிமுறையை அதிகரிக்குமாறு கடற்படையிடம் கோரப்பட்டுள்ளது என்று அமைச்சர் டக்ளஸ் கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

"எந்தவொரு இந்திய மீனவர்களும் எமது கடற்பிரதேசத்துக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில், கடல் எல்லைகளில் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கடற்படையினரை நான் கேட்டுக்கொண்டேன். குறிப்பாக, பாதிக்கப்பட்ட மீனவர்கள் உள்ளூர் மீனவர்களுடன் மத்திய கடற்பரப்பில் தொடர்பு கொள்கிறார்கள் என்று தகவல்கள் வந்துள்ளன. இந்தியாவில் கொவிட் -19 இன் பரவல் புதிய பிறழ்ந்த திரிபுடன் அதிகரித்து வரும் நிலையில் எமது நாட்டின் எல்லைகளை இறுக்குமாறு கடற்படையிடம் கோரியுள்ளேன்" என்று அவர் அந்த ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார். (ப)

## சர்வாதிகாரப் போக்கை நாட்டில் அனுமதியோம்
### சஜித் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.28



இலங்கை ஒரு ஜனநாயக நாடாகும். இங்கு சகலருக்கும் கருத்துச் சுதந்திரம் காணப்படுகிறது.

அதனை ஒழிக்கும் வகையில் சர்வாதிகாரப்போக்கில் எவரும் செயற்பட முடியாது. அதற்கு நாட்டில் இடமளிக்க முடியாது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் பழிவாங்கும் அரசியலைக் கற்கவில்லை. மக்களின் நலனுக்காகச் செயற்படுகின்ற சுபீட்சமான நாட்டை உருவாக்கும் அரசியலையே நாம் கற்றுள்ளோம். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும். நாட்டில் முதற்கட்டமாக தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்குவதற்குப் பதிலாக, அரசை விமர்சிப்பவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மாத்திரமே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறு கருத்து வெளியிடுபவர்களின் சமூக வலைத்தள கணக்குகளும் முடக்கப்படுகின்றன. இதற்கெல்லாம் இனியும் இடமளிக்க முடியாது என்றார். (ப-4)

## ஹரீனை சந்தித்தாரா நாமல்?

கொழும்பு,ஏப்.28

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ சிகிச்சை பெறும் மருத்துவமனைக்கு, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச நேற்று முன்தினம் சென்றிருந்தார். நவலோகா மருத்துவமனையில் ஹரின் சிகிச்சை பெற்று வருகிறார். எனினும் நாமல், தனது மற்றொரு நண்பரை பார்க்கச் சென்றுள்ளார்.

ஹரின் பெர்னாண்டோ அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது தனக்குத் தெரியாது என்று அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். அதேவேளை ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஹரின் பெர்னாண்டோவுக்கு ஏதேனும் தெரிந்திருந்தால், அது தொடர்பில் நாட்டுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று நாமல் ராஜபக்ச தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-4)

**வீடு வாடகைக்கு**

சங்கானை பிரதான வீதியில் (மேல் மாடி வீடு மட்டும்). வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 623 7037

**வேலையாட்கள் தேவை**

மருந்துகடையில் வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை மற்றும் Sales வேலைக்கு வேலையாட்கள் தேவை.

O/L விரும்பத்தக்கது வயது எல்லை 30 உட்பட்டது

077 170 3741

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, இல. 361 ... அச்சகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.